991
991

॥ श्रियै नमः ॥

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச்செய்த

# ஸ்ரீஸ்தவம்

திருக்குடந்தை

**சிரோமணி, ப. ஸ்ரீநிவாஸராகவன்**

இயற்றிய தெளிவுரையுடன் கூடியது.

கும்பகோணம்,
ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்டில்
அச்சிடப்பட்டது.

] 1937 [ விலை 0—6—0

Q22:417
N37
12 1053

॥ श्रियै नम:

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச்

# ஸ்ரீஸ்தவம்

திருக்குடந்தை

**சிரோமணி, ப. ஸ்ரீநிவாஸராகவன்**

இயற்றிய தெளிவுரையுடன் கூடியது.

கும்பகோணம்.
ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட்டில்
அச்சிடப்பட்டது.

All Rights Reserved ] **1937** [ விலை 0—6—0

# முன்னு

श्रीमते वेदान्तरामानुज महादेशिकाय न

श्रीमते श्रीनिवास महादेशिकायं नमः

அன்புள்ள மஹான்களுக்கு அடியேன் செய்யும் விண்ணப்பம்:—

ஸ்ரீ பகவத் ராமானுஜருடைய முக்ய சிஷ்யரான கூரத்தாழ்வான் அருளிய பஞ்சஸ்தவத்துள் ஸ்ரீஸ்தவம் என்பது ஸ்ரீ லக்ஷ்மீதேவியின் ஸ்தோத்ரம். இந்த ஸ்தோத்திரத்தை தினந்தோறும் பக்தியுடன் பாராயணம் பண்ணினால், பிராட்டியினுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்ரராகி இஹபர ஸுகங்களை எளிதில் பெறலாம் என்பதில் ஐயமில்லை.

யாவரும் எளிதில் அறியும்பொருட்டுப் பதங்களுக்குத் தனித்தனியே உரையும், பொழிப்புரையும் பிரமாணங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது.

அடியேனுடைய சிற்றறிவால் நேர்ந்த பிழைகளைப் பொறுத்து இப்புத்தகத்தை ஆதரிக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

திருக்குடந்தை,<br>31—7—37.

இங்ஙனம்,<br>ப. ஸ்ரீநிவாஸராகவன்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:—

1. ப. ஸ்ரீநிவாஸராகவன்,
No. 5. ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி
ஸன்னதித் தெரு,
கும்பகோணம்.

2. ஸ்ரீ ஜனார்த்தன பிரிண்டிங் ஒர்க்ஸ், (லிமிடெட்)
டவுன் ஹைஸ்கூல் ரோடு,
கும்பகோணம்.

# பிழை திருத்தம்:

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | சுலோகத்தில் | त्यसूक्तय: | यदुक्तय: |
| 3 | 8 | ருபயா | ரூபயா |
| 4 | 11 | காக்கக்காக்க | காக்க |
| 4 | 2 | வேறி | வேரி |
| 11 | 1 | வேறி | வேரி |
| 13 | சுலோகத்தில் | वन्धा | वन्ध्या |
| 17 | 11 | நேசாஸ் | நேசாநாஸ் |
| 18 | 9 | குணங்சளை | குணங்களை |
| 20 | சுலோகத்தில் | दुष्येचछ्वापि | दुष्येच्छ्वापि |
| 25 | 13 | ஈச்வர; | ஈச்வர: |
| 25 | 17 | ஈச்வரன் | ஈச்வர: |
| 26 | 24 | ரபந்தி அமந்திச | ரமந்தி அபந்திச |
| 26 | 6 | இல்வணை | இவ்வணை |
| 27 | 25 | அவைகெள | அவைகளை |
| 29 | சுலோகத்தில் | यन्नास्ध्येव | यन्नास्त्येव |
| 32 | 14 | அதனை | அவனை |
| 34 | 6 | பெறுமை | பெருமை |
| 39 | 19 | த்ருபுவந | த்ரிபுவந |
| 40 | 5 | ஸாமெ | ஸாமே |
| 40 | 10 | महेशास्यु: | महेशास्स्यु: |
| 40 | 13 | பரம் | பராம் |
| 41 | 13 | திரு | த்ரி |
| 42 | 2 | ஏதந்தெ | ஏதந்தே |

॥ ஸ்ரீ: ॥

ஸ்ரீ ஆராவமுதாழ்வான் கோமளவல்லித்தாயார்
திருவடிகளே சரணம்.





श्रीमते भगवते भाष्यकाराय महादेशिकाय नमः ॥
श्रीवत्स चिह्नमिश्रेभ्यो नमः ॥
श्रीमते निगमान्त महादेशिकाय नमः ॥

ஸ்ரீ கூரத்தாழ்வான் அருளிச்செய்த

# ஸ்ரீஸ்தவம்.

## தனியன்.

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमउक्ति मधीमहे ।
यत्सूक्तयस्त्रयीकण्ठे यान्ति मङ्गळसूत्रतां ॥

स्वस्ति श्री र्दिशतादशेष जगतां सर्गोपसर्गस्थितीः
स्वर्गं दुर्गतिमापवर्गिक पदं सर्वंच कुर्वन् हरिः ।
यस्या वीक्ष्य मुखं तदिङ्गितपराधीनोविधत्ते ऽखिलं
क्रीडेयं खलु नान्यथाऽस्यरसदा स्यादैकरस्यात्तया ॥

ஸ்வஸ்தி ச்ரீர்திசதா தசேஷ ஜகதாம்
ஸர்க்கோ பஸர்க்கஸ்திதீ:
ஸ்வர்கம் துர்கதி மாபவர்கிகபதம்
ஸர்வம் ச குர்வந்ஹரி: |
யஸ்யாவீக்ஷ்ய மூகம் ததிங்கித
பராதீநோ விதத்தே அகிலம்
க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா
ஸ்யா தைகரஸ்யாத் தயா || (1)

பதவுரை.

| | |
|---|---|
| அசேஷ ஜகதாம் | எல்லா உலகங்களுடைய |
| ஸர்க உபஸர்க ஸ்திதீ: | உத்பத்தி, ஸம்ஹாரம் காப்பது என்கிறவைகளேயும் |
| ஸ்வர்கம் | ஸ்வர்கலோகத்தையும் |
| துர்கதிம் | நரகத்தையும் |
| ஆபவர்கிகபதம் | மோக்ஷஸ்தானமாகிய பரமபதத்தையும் |
| ஸர்வம் ச | மற்றுமுள்ள ஸகலபோகங்களேயும் |
| குர்வந் ஹரி: | செய்கிறவரான ஸ்ரீமந்நாராயணன் |
| யஸ்யா: | எவளுடைய |
| முகம் வீக்ஷ்ய | திருமுகத்தைப் பார்த்து |
| தத் இங்கித பராதீன: | அந்தந்தஜாடைகளுக்குப் பாதந்த்ரனாய் இருந்துகொண்டு |
| அகிலம் | கீழ்ச்சொல்லிய உத்பத்தி முதலியவைகளனைத்தையும் |
| விதத்தே | செய்கிருரோ; |
| அந்யதா | இப்படி அவளுடைய ஜாடைகளுக்கு பாதீனனுயில்லாவிடில் |
| அஸ்ய | அப்பெருமானுக்கு |

| | |
|---|---|
| தயா | அந்த லக்ஷ்மீதேவியோடுகூட |
| ஐகரஸ்யாத் | ஸமமான ஆனந்தத்தையுடையவனா யிருக்கும் தன்மையால் |
| இயம் க்ரீடா | இந்த விளையாட்டானது |
| ரஸதா நஸ்யாத் கலு | ஸுகத்தைக் கொடுக்கக் கூடியதாய் ஆகமாட்டாதோ; |
| ஸா ச்ரீ: | அவ்வளவு பெருமைவாய்ந்த பெரிய பிராட்டியாரெனப்படும் லக்ஷ்மீதேவியானவள் |
| ஸ்வஸ்தி திசதாத் | மங்களத்தைக் கொடுக்கக் கடவள். |

## அவதாரிகை.

'லக்ஷ்ம்யா ஸஹ ஹ்ருஷீகேசோ தேவ்யா காருண்ய ரூபயா | ரக்ஷகஸ் ஸர்வஸித்தாந்தே வேதாந்தேபிச கீயதே' என்று ஸர்வேச்வரனான நாராயணன் ஸபத்நீகனாய்க் கொண்டே ஸர்வஜகத்ரக்ஷணம் செய்கிறான் என்பது ஸர்வஸித்தாந்தங்களிலும் வேதாந்தங்களிலும் பரக்கப் பேசப்பட்டது. அறம் பொருள் இன்பம் எனப்படும் மூவகைப் புருஷார்த்தங்களும் பெரிய பிராட்டியார் திருவருளாலேயே அடையப்படும் என்பதும் இமவந்தந்தொடங்கி இருங்கடலளவும் யாவரும் அறிந்ததே. மேலும் தாபத்ரயத்தால் வருந்துகிற ஸம்ஸாரிகளனைவரும் இக்கொடிய ஸம்ஸாரத்தைத் தொலைத்து இருவினைகளையும் சரித்து வீடு பெறுவதற்கு உபாயமும் திருமகளுடன் கூடின திருமாலே யாவன். ஆகவே பரமபுருஷனான நாராயணன் போல் திருமகளும் உபாயமென்றுதான் நமது கொள்கை. இப்பவக் கடலைக் கடந்து அர்ச்சிராதி வழியேசென்று ஸ்ரீ வைகுண்டலோகத்தை அடைந்தாலும் பிராட்டியுடன் கூடின பெருமானுக்கே நித்யகிங்கரனாகையால் ஸர்வேச்வரன் போல் பிராட்டியும் உபேயமென்றும் நமது கொள்கை. இவள் ப்ராப்யமான பரப்ரஹ்மத்தில் பிரிக்கமுடியாத விசேஷணமாய் சொருகி நிற்பதால் உபாயத்வித்வமும் ப்ராப்யத்வித்வமும் ப்ர

ஸங்கியாது என்பதுவும் ரஹஸ்யக்ரந்தங்களில் விஸ்தாரமாகப் பேசப்பட்டது. "வேறிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்கும்" நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும் கொண்டு நின் கோயில் சீய்த்து" என்கிற மயர்வறமதிநலமருளப் பெற்ற நம்மாழ்வார் பாசுரங்களிலும் இவ்வர்த்தம் ப்ரஸித்தம். "அலமேஷாபரித்ராதும் ராக்ஷஸ்யோ மஹதோபயாத்" "அலமேஷாபரித்ராதும் ராகவாத் ராக்ஷஸீகணம்". ராக்ஷஸிகளைப் பெரியதோர் பயத்திலிருந்தும் இப்பிராட்டியே காக்கவல்லவளென்றும், ஸ்ரீராமபிரானே ராக்ஷஸிகளை நலியவேணுமென்று நினைத்தாலும் அவனிடமிருந்தும் இவளே ராக்ஷஸிகளைக்காக்க காக்கவல்லவளென்றும் ஆதிகாவ்யத்திலே பேசப்பட்டபடியால் ஸம்ஸாரமென்னும் மஹாபயத்திலிருந்தும் இவளே நம்மைக் காப்பாளென்பதும் அறியத்தக்கது. "வாச: பரம் ப்ரார்த்தயிதா ப்ரடத்யேந்நியத: ச்ரியம்" பரமபுருஷனை வேண்டுகிறவன் நியமத்துடன் லக்ஷ்மீதேவியைச் சரணமடையவேண்டும் என்று சௌநக பகவான் விதித்தான். "ஆத்மவித்யாச தேவி த்வம் விமுக்தி பலதாயிநீ" ஹே தேவி! நீ ஆத்மவித்யையாயும் மோக்ஷபலத்தைக் கொடுக்கிறவளாயுமிருக்கிறாய் என்று பராசரப்ரஹ்ம ருஷி பேசினார். "ஸர்வகாமப்ரதாம் ரம்யாம்ஸம்ஸாரார்ணவதாரிணீம் | க்ஷிப்ரப்ரஸாதிநீம் தேவீம் சரண்யாம் அநுசிந்தயேத்" என்று நான்முகக் கடவுளும் லக்ஷ்மியைப் பவக்கடலைக் கடத்துகிறவளாகவே அறுதியிட்டான். ப்ரஹ்மபுராணத்திலும் "ஸக்ருத்விபாதா ஸர்வார்த்தி ஸமுத்ர பரிசோஷிணீ" "பவபங்காபஹாரிணீ" "பரநிர்வாணதாயிநீ" என்று ஸம்ஸாரத்தைப்போக்கி மோக்ஷஸுகத்தைக் கொடுக்கிறாளென்றே சொல்லப்பட்டது. "யாமாலம்ப்ய ஸுகேநேமம் துஸ்தரம்ஹி குணோததிம் | நிஸ்தரந்த்யசிரேணைவ வ்யக்த த்யாந பராயணா: || இவளை ஆச்ரயித்தே யோகிகள் கடப்பதற்கரிய பவக்கடலை எளிதாகவே

தாண்டுகிறார்கள் என்று ச்ரிய:பதி தானே ஸாத்வத ஸம்ஹிதையில் ஓதினான். இவற்றையெல்லாம் கணிசித்தே ஆளவந்தாரும் "ச்ரேயோ நஹ்யரவிந்தலோசன மந: காந்தாப்ரஸாதாத்ருதே ஸம்ஸ்ருத்யக்ஷரவைஷ்ணவாத்வஸு நிருணாம் ஸம்பாவ்யதே கர்ஹிசித்" ஐச்வர்யத்திலோ கைவல்யத்திலோ அர்ச்சிராதி வழியே சென்று பரமபதத்தை அடைவதிலோ அனுபவிக்கப்படுகிற ஸுகமானது பெரிய பிராட்டியாரின் அனுக்ரஹமில்லாவிடில் அடையப்படமாட்டாது; என்றே அருளிச் செய்தார். இப்படி நான்குவித புருஷார்த்தங்களையும் அப்பிராட்டியே அனைத்துலகங்களுக்கும் அருள் புரிகிறாளென்கிற அவளது ஔதார்ய குணத்தை "ச்ரியம் லோகே தேவஜுஷ்டாம் உதாராம்" என்று ச்ருதியே உத்கோஷித்தது. அந்த உதார சப்தத்தையே "ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம்பதம் வா கஸ்மைசித் தஞ்ஜலிபரம் வஹதே விதீர்ய I அஸ்மை ந கிஞ்சிதுசிதம் க்ருதமித்யதாம்ப த்வம் லஜ்ஜஸே கதய கோயமுதாரபாவ: உன்பொருட்டு அஞ்ஜலி செய்கிற ஒருவனுக்கு ஐச்வர்யம் கைவல்யம் பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் இவைகளைக் கொடுத்தும், இவனுக்கு நாம் என்ன செய்தோமென்று நீ வெட்கப்படுகிறாய்; என்று பட்டர் விவரித்தருளினார். "யதா ஸர்வகதோ விஷ்ணுஸ்ததைவேயம் த்விஜோத்தம" என்றபடி இவள் தனது கொழுநனைப்போல் தானும் ஸ்வரூபத்தால் எங்கும் நிறைந்திருக்கிறாளென்பதும் ப்ரமாணஸித்தம். மேலும் "அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபாயதா" என்றும் "யாந்யந்யாநி யதா ஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்யாஹுஸ்ஸ்வைரநுரூபரூபவிபவை: காடோபகூடாநிதே" என்றும் சொல்லுகிறபடி இவள் "அகலகில்லேனிறையும்" என்றபடி திருமாலைப் பிரியாமலே இருப்பாள். இவற்றையெல்லாம் ஆலோசித்தே "உனக்கேற்கும் கோலமலர்ப்பாவை" யென்றும் "ஸதா தவைவோசிதயா தவச்ரி

யா" என்றும் பெரியோர்கள் பேசி நின்றூர்கள். ஆகலால் இப்படிப் பெருமை வாய்ந்த பிராட்டியை ஒரு நொடிப் பொழுதும் பிரியாது சேர்ந்திருந்தே ஸர்வேச்வரன் ஜகத் ரக்ஷணம் செய்கிருனென்பது ஸுவ்யக்தம். "தேவ திர்யங் மநுஷ்யேஷு புந்நாமா பகவான் ஹரி: I ஸ்த்ரீநாம்நீ லக்ஷ்மீ: மைத்ரேய நாநயோர் வித்யதே பரம்"II இவ்விருவர்களைக் காட்டிலும் மேலானதோர் பொருளில்லை என்று ஸ்ரீ பராசர பகவான் நிர்ணயம் செய்தார். ஆகையால் முமுக்ஷுக்கள் அனைவரும் முற்படப் பெரிய பிராட்டியாரை வணங்கி வழி பட வேண்டுமென்பது ஸ்வரூப ப்ராப்தம்.

மேலும் "ஆகாரஸ்யது விஜ்ஞாநம் ஆகாரஞான பூர்வ கம் I தேநாகாரம் ச்ரியம் ஜ்ஞாத்வா ஞாதவ்யோ பகவான் ஹரி: II என்றபடி பெரிய பிராட்டியாரை அறிந்த பின்பே பெருமாளை அறிய முடியுமாதலால் பிராட்டியின் ஸ்வரூப ரூப குண விபூத்யாதிகளை அறியவேண்டியது அவச்யம்.

மற்றும் லக்ஷ்மீ தேவியானவள், குற்றவாளிகளான நம்மேல் கொண்ட ஸ்ரீய:பதியான புருஷோத்தமனது சீற்றத் தை மாற்றி அவனது காருண்யம் நமக்கு உஜ்ஜீவகமாம்படி பண்ணிக் கொடுக்கிற புருஷகாரமாய் இருப்பதாலும் முற் படப் பெரிய பிராட்டியாரை அறிந்துகொள்ள வேண்டியது ப்ராப்தமாகும். புருஷகாரமாவது ஸாபேக்ஷனை புருஷ னுக்கு அபேக்ஷிதம் தலைக் கட்டிக் கொடுக்கவல்ல சேதனன் அபிகம்யனைகைக்கு உபாயமாக வரிக்கப்பட்ட சேதநாந்த ரம் என்று ஸ்ரீ தேசிகன் நியமித்தருளினர்.

இவள் "நகச்சிந்நாபராத்யதி" நிர்தோஷ: க இஹ ஜகதி" க: குப்யேத்வாநரோத்தம, மர்ஷயாமீஹ துர்ப லா:" என்று சொல்லுகையே ஸ்வபாவமாகக் கொண்டிருப்ப

தாலும், இவளை முன்னிட்டுச் சென்றால் அவன் மறுக்க மாட்டாதொழிகையாலும், ப்ரஹ்லாதனுக்காக ஹிரண்யன் விஷயத்தில் சீற்றத்துடன் தோன்றின ந்ருஸிம்ஹனைக்கண்டு பயங்கொண்ட ப்ரஹ்மாதிகள் இவளைச் சரணமாகப் பற்றி இவள் முன்னிலையாக அவனைக் கிட்டித் துதித்தார்களென்றும், இளையபெருமாள் ஸீதாப் பிராட்டியை முன்னிட்டு ஸ்ரீ ராமனை வேண்டிக்கொண்டார் என்றும் சொல்லுகிற அநுஷ்டானங்களாலும், உலகத்தில் அரசர்கள் அந்தப்புர பரிஜனங்களைப் பெருங்குற்றவாளிகளாயிருப்பினும் சிறியதோர் வ்யாஜத்தால் திருப்தியடைந்து க்ஷமிக்கக் காண்கிறோம் என்கிற லோக த்ருஷ்டியாலும், "அகலகில்லேன் இறையு" மென்பது முதலான ஆழ்வார்கள் பாசுரங்களாலும் இவள் புருஷகார பூதை என்பது நாடு நகரமும் நன்கறிந்ததே. இப்புருஷகாரத்தையே "அஸ்திகர்மார்ஹ ப்லதே பத்யௌ க்ருத்யத்வயம் ச்ரிய: | நிக்ரஹாத் வாரணம் காலே ஸந்துக்ஷணமநுக்ரஹே" கர்மாநு குணமாகப் பலத்தைக் கொடுக்கிற தனது பதியினிடம் பெரிய பிராட்டியாருக்கு இரண்டு கார்யங்களுண்டு. அவன் ஒருவனை நிக்ரஹிக்க நினைத்தால் அந்நிக்ரஹத்திலிருந்து அவனைத் தாண்டிவிப்பதும் அவன் அனுக்ரஹம் செய்யுங்கால் அதிகமாகச் செய்யவேணும் என்று சிபார்சு செய்வதுமென்று" என்று ஸங்க்ரஹித்தார்கள்.

ஆதலால் உபாயமாயும் உபேயமாயும் புருஷகாரமாயும் இருக்கிற பிராட்டியை முமுக்ஷுக்களனைவரும் முற்படஅறிய வேண்டுமாதலால் பரம காருணிகரான கூரத்தாழ்வான் ஸ்ரீ ஸ்தவம் எனப்படும் இந்த ஸ்தோத்ரத்தை இயற்றிப் பிராட்டியின் ஸ்வரூப ரூப குண விபூதிகளை நம் போல்வார் உஜ்ஜீவிக்க வேண்டி விளக்கிக் காட்டினார்.

அவதாரிகை முற்றிற்று.

இந்த ஸ்தோத்ரம் இடையூறின்றித் தலைக் கட்டவேண்டி ஆசீர்வசன ரூபமான மங்களத்தைச் செய்தருளுகிறார் "ஸ்வஸ்தி ஶ்ரீ:" என்று.

ஸ்வஸ்தி ச்ரீ:— ஸர்வேச்வரனான நாராயணன் ஸமஸ்த லோகங்களையும் உண்டுபண்ணுகிறான். அவற்றையே ஒரு கால விசேஷத்திலே ஸம்ஹாரம் செய்கிறான். ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கு நடுவே எல்லா உலகங்களுக்கும் போக்ய போகோபகரண போகஸ்தானங்களைக் கொடுத்துக்காப்பாற்றுகிறான். புண்ய கர்மங்களைச் செய்த புருஷர்களுக்கு ஸ்வர்க்கம் முதலான ஸுகத்தைக் கொடுக்கும் உயர்ந்த லோகங்களைக் கொடுக்கிறான். அங்ஙனமே பாபங்களைச் செய்தவர்களுக்கு நரகத்தைக் கொடுத்து துக்கத்தை விளைவிக்கிறான். தன்னிடம் பக்தி செய்தவர்களுக்கும் தன்னைச் சரணம் புகுந்தவர்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுத்து அவர்களை நித்யாநந்திகளாகச் செய்கிறான். இப்படி அவன் கார்யம் செய்யும் பொழுது தனது பத்னியான பெரிய பிராட்டியாருடைய அனுமதி வேண்டி அவளது திருமுகத்தைப் பார்க்கிறான். அவள் அவன் செய்ய விரும்பிய கார்யங்களைத் தானும் செய்ய வேணுமென்று கருதினால் அதற்குரிய சில ஜாடைகளைக் காட்டுகிறாள். அவைகளை தெரிந்துகொண்டு அப்பிராட்டியின் விருப்பப்படியே அவைகளைச் செய்கிறான். அவளுடைய அபிமதி இல்லாவிடில் அத்திருமால் அவைகளைச்செய்வதில்லையாம். இப்படிப் பகவான் ஸமஸ்தலோகங்களுடைய ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதிலும் ஸ்வர்க்க நரகங்களைக் கொடுப்பதிலும் மோக்ஷத்தை அளிப்பதிலும் அவளுடைய அபிமதிவேண்டி அவளுடைய திருமுகத்தைப் பார்த்து அவள் செய்யும் முக ஜாடைகளால் அவளது அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு அதற்கு ஈடாகக் கீழ்ச்

சொன்ன காரியங்களைச் செய்கிறானே; அப்படிப் பெருமை வாய்ந்த பெரிய பிராட்டியார் அவளைத் துதிப்பதற்குப் பிரயத்னம் செய்த அடியேனுக்கு வாக்ஸம்ருத்தி, புத்தி, பக்தி முதலிய ஸகல க்ஷேமங்களையும் கொடுக்கக் கடவள் என்று வேண்டிக்கொள்கிறார்.

இப்படிப் பரமபுருஷன் பிராட்டியின் அபிமதப்படியே கார்யம்செய்வது எதற்காகவென்னில், அவன் அவளோடு ஏகரஸனாய் இருப்பதினால் என்கிறார் நான்காமடியில். திருமால் திருமகளோடு ஏகரஸனாயிருப்பதாவது; இந்த ஜகத்ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரங்களாகிற விளையாட்டானது அப்பிராட்டியின் அபிப்ராயப்படி செய்தால் தனக்கு ப்ரீதியையும் அவளது அபிப்ராயமில்லாமல் செய்தால் அதுவே தனக்கு அப்ரீதியையும் விளைவிப்பதாயிருக்கிறபடியான ஸ்வபாவ விசேஷம்.

இப்படி இருவரும் ஸமமான ஆனந்தத்தை யுடையவர்களாயிருப்பதால் அவளது விருப்பப்படியே சகல கார்யங்களையும் அப்பரம புருஷன் செய்து இருவரும் சமமாக லீலாரஸத்தை அநுபவிக்கிறார்கள் என்றபடி.

ச்ரீ:— ஸ்ரீயதே, ச்ரயதே, ச்ருணோதி ச்ராவயதி, ச்ரிணாதி, ஸ்ரீணாதி என்று ஆறுபடியாக பகவச்சாஸ்த்ரங்களிலே நிர்வசனம் செய்யப்பட்டிருக்கும்.

ஸ்ரீயதே தங்களுடைய க்ஷேமத்தை விரும்பும் ப்ரஜைகளாலே ஆச்ரயிக்கப்படுகிறவள் என்பதாம். ஐச்வர்யம் கைவல்யம், அபவர்க்கம் என்கிற புருஷார்த்தங்களை அபேக்ஷிக்கிறவர்களான அதிகாரிகளனைவராலும் ஸேவிக்கப்படுகிறவள் எனப் பொருள்.

ச்ரயதே:— நம்மைக் காப்பாற்ற வேண்டி நம்பால் அவ்வீசன் கொண்ட சீற்றத்தை மாற்றி அவனது காருண்யம் நமக்கு உஜ்ஜீவகமாம்படி செய்வதற்காக அப்பரம புருஷனை ஆச்ரயித்திருக்கிறாள். தமது பதியிடம் "நகச்சிந் நாபராத்யதி" "கிமேதந் நிர்தோஷ: கஇஹஜகதி" என்கிறபடி சில வுபதேசங்களாலும் தன்னழகாலும் அவனைத் திருத்தி அவனை நமக் கருள்புரியும்படி செய்வதாகிற புருஷகாரக்ருத்யம் இவ்யுத்பத்திகளாலே விளங்கும்.

சீருணோதி ச்ராவயதி:— 1 மத்பதத்வந்த்வமேகம்யே ப்ரபத்யந்தே பாராயணம் | உத்தரிஷ்யர்ம் யஹம் தேவி ஸம்ஸாராத் ஸ்வயமேவதாந் || 2 ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: | பரமப்ராப்யமான எனது திருவடிகளிரண்டையே எவர்கள் சரணமடைகிறார்களோ; அவர்களை நானே ஸம்ஸாரத்திலிருந்தும் தூக்கிவிடுகிறேன். தர்மங்களுள் சிறந்தது ஆந்ருசம்ஸ்யம் (க்ரூரஹ்ருதயனாயில்லாமலிருப்பது, ஈரமான நெஞ்சுடனிருப்பது) என்பது முதலான அத்திருமால் சொல்லும் வார்த்தைகளைக் கேட்டிருந்து பிறகு ஸ்வோஜ்ஜீவநார்த்திகளான ப்ரஜைகள் சரணம்புகு மவசரத்திலே சீருணுசா் வஹித: காந்தயத்தே வக்ஷ்யாம்யஹம் ஹிதம் ப்ராணைரபி த்வயா நித்யம் ஸம்ரக்ஷ்ய: சரணாகத: | என் அன்புள்ள நாதனே! நான் சொல்லும் ஹிதத்தைக் கேட்கவேண்டும். உன்னைச் சரணமடைந்தவனை உனது பிராணங்களைக்கொண்டாகிலும் காப்பாற்றவேணும் என்றும் சில வார்த்தைகளை அவனைக்கேட்கும்படி செய்கிறாளென்பதும் இவ்வ்யுத்பத்திகளால் கிடைக்கும் பொருள்களாகும்.

அல்லது ஸர்வேச்வரனிடமிருந்து லோகங்களுக்கு ஹிதம் என்ன? என்று கேட்டு அதை "மித்ர மௌபயிகம் கா்த்தும் என்று நமக்கு உபதேசிக்கிறாளென்பதும் பொருளாகும்.

ச்ரிணுதி ச்ரீணுதி :— "வேறிமாருத பூமேலிருப்பாள் வினை தீர்க்குமென்றபடி ஆச்ரிதர்களுடைய பாபங்களைப் போக்குகிருளென்பதும்" பூவளரும் திருமகளாலருள்பெற்றுப் பொன்னுலகில் பொலிவர்" என்றபடி தனது ஔதார்யாதி குணங்களால் தன்னை யடைந்தவர்களுக்குப் பரமபதத்தைக் கொடுத்து அவர்களை உகப்பிக்கிருளென்பதும் பொருளாகும். இவ்வகைப்பட்ட பெருமைகள் ஸ்ரீ: என்ற விடத்தில் அனுஸந்திக்கத்தக்கவை.

ஹரி :— ஆச்ரிதர்களுடைய தோஷங்களை அபஹரிக்கிறவன், அல்லது ப்ராஹ்மாணம் இந்த்ரம் ருத்ரம் ச யமம் வருணமேவச | நிக்ருஹ்ய ஹரதே யஸ்மாத் தஸ்மாத் ஹரிரீர்யதே || என்றபடி ஸர்வஜகத்ஸம்ஹாரம் செய்பவன்.

हे श्रीर्देवि समस्त लोक जननीं त्वां स्तोतु मीहामहे
युक्तां भावय भारतीं प्रगुणय प्रेमप्रधानां धियं ।
भक्तिं भन्दय नन्दयाश्रितमिमं दासं जनं तावकं
लक्ष्यं लक्ष्मि कटाक्ष वीचिविसृते स्ते स्याम चामी वयं ॥

ஹே ச்ரீர் தேவி ஸமஸ்தலோகஜனனீம்
த்வாம் ஸ்தோதுமீஹாமஹே
யுக்தாம் பாவய பாரதீம்
ப்ரகுணய ப்ரேமப்ர தானும் தியம் ।
பக்திம் பந்தய நந்தயாச்ரிதமிமம்
தாஸம் ஜனம் தாவகம்
லக்ஷ்யம் லக்ஷ்மி கடாக்ஷவீசி விஸ்ருதேஸ்
தே ஸ்யாம சாமீவயம் ॥ (2)

| | |
|---|---|
| ஹே ச்ரீ: தேவி லக்ஷ்மி | எல்லோராலும் ஆச்ரயிக்கப்பட்டவளாய் மிகவும் விளங்குகிறவளான லக்ஷ்மீதேவியே ! |
| ஸமஸ்தலோகஜனனீம் த்வாம் | ஸகல லோகங்களுக்கும் தாயான உன்னை |
| ஸ்தோதும் | ஸ்தோத்ரம் செய்வதற்கு |
| ஈஹாமஹே | ப்ரயத்னம் செய்கிறோம். |
| யுக்தாம் பாரதீம் | அந்த ஸ்தோத்திரத்திற்குஉபயோகப்படுவதற்கேற்ற ஸரஸ்வதியை |
| பாவய | அருள்வாயாக. |
| ப்ரேம ப்ரதானாம் தியம் | அன்பை முக்கியமாகக்கொண்ட புத்தியை |
| ப்ரகுணய | வளரச்செய்யக் கடவாய். |
| பக்திம் | பக்தியை |
| பந்தய | கல்யாணகரமாகும்படி விருத்தி செய்யக் கடவாய். |
| ஆச்ரிதம் தாவகம் தாஸம் இமம் ஜநம் | உன்னைச்சரணமடைந்தவனும் உனக்கடிமையுமான இந்த ஜனத்தை (என்னை) |
| நந்தய | ஸந்தோஷத்தையடையும்படி செய்யக் கடவாய். |
| அமீ வயம் ச | இந்த நாங்களும் |
| தே | உன்னுடைய |
| கடாக்ஷ வீசி விஸ்ருதே: | கடாக்ஷங்களாகிற அலைகளுடைய கிளர்ச்சிக்கு |
| லக்ஷ்யம் ஸ்யாம | பாத்ர பூதர்களாகக் கடவோம். |

கீழே பெரிய பிராட்டியார் நமக்கு மங்களத்தைக் கொடுக்கட்டுமென்று பிரார்த்தித்தார். அதையே தெளிய வுரைக்கிறார் இதில்.

ஹேச்ரீ: தேவி :— ஆச்ரிதர்களை ஸந்தோஷிக்கும்படி செய்கிற லக்ஷ்மீதேவியே! நாங்கள் உன்னை ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று ப்ரயத்னம் செய்கிறோம். எங்களுக்கு உன்னைத் துதிசெய்வதற்குத் தகுதியான ஸரஸ்வதியை அருள்செய்யவேணும். உன்னைத் துதிப்பதற்கேற்ற ஸரஸ்வதீ என் நாவில் அமருவதற்குக் காரணமான உனது கல்யாண குணங்களைப் பற்றிய அன்புடன் கூடின புத்தியை எனக்குக் கொடுத்து வளரும்படி செய்யவேணும். மேலும் எனக்கு உன்பாலுள்ள பக்தியை வளரச் செய்து பரபக்தி பரஞான பரமபக்தி என்கிற பரிபாகங்களையடையும்படி செய்து மங்களகரமாகக் செய்யவேணும். உன்னையே சரணமடைந்த அடியேனை உன்னுடைய நித்ய கைங்கரியத்திலே அமரும்படிசெய்து ஆநந்தத்தையடையும்படி செய்ய வேணும். நித்யஸூரிகள் எப்படி உனது கைங்கர்யத்திலே ஈடுபட்டுப் பரமானந்தபரிதர்களாய் உன்னுடைய கடாக்ஷங்களாகிற அலைகளின் கிளர்த்திக்குப் பாத்திரர்களாயிருக்கிறார்களோ; அப்படியே அவர்களுடன் அடியேனும் உன்னுடைய கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகவேண்டும் எனப் பிரார்த்தித்தார். ஆகவே உன்னைத் துதிசெய்யவேணும் என்று விரும்பிய எனக்கு அதற்குவேண்டிய வாக்கையும் புத்தியையும் கொடுத்துத் துதிசெய்யச்செய்து உனது பக்தியையும் கொடுத்து என்னை ஆனந்திக்கச் செய்து நித்யஸூரிகளுடன் பரமபதத்தில் உன்னுடைய கடாக்ஷத்திற்கு நான் லக்ஷ்யமாகும்படி செய்யவேணுமென்பதுதான் கீழ் சுலோகத்திலும் ஸ்வஸ்தி திசதாத் என்பதால் வேண்டப்பட்ட விஷயமாகுமென்று விவரித்தார்போலுமிதில். (2)

स्तोत्रं नाम किमामनन्ति कवयो यद्यन्यदीयान् गुणान्
अन्यत्रत्वसतोऽधिरोप्य फणितिस्सा तर्हि वन्ध्या त्वयि ।

सम्यक्सत्यगुणाभिवर्णन मथो ब्रूयुः कथं तादृशी
वाग्वाचस्पतिनापि शक्यरचना त्वत्सद्गुणार्णोनिधौ ॥

ஸ்தோத்ரம் நாம கிமாமநந்தி கவயோ
யத்யந்ய தீயாந் குணாந்
அந்யத்ர த்வஸதோ நிரோப்ய பணி திஸ்
ஸாதர்ஹி வந்த்யா த்வயி ।
ஸம்யக்ஸத்ய குணாபிவர்ணனமதோ
ப்ரூயு: கதம் தாத்ருசீ
வாக் வாசஸ்பதிநாபி சக்யரசநா
த்வத்ஸத்குணார்ணோநிதௌ ॥ (3)

| | |
|---|---|
| கவய: | கவிகள் |
| கிம் நாம | எதைத் தான் |
| ஸ்தோத்ரம் | ஸ்தோத்ரமென்று |
| ஆமனந்தி | சொல்லுகிறார்கள். |
| அந்யதீயாந் | துதிக்கப்படுகிறவர்களிலும் வேறான மற்றவர்களிடம் உள்ளவையும் |
| அந்யத்ர அஸத: | அவர்களில் வேறான துதிக்கப்படுகிறவர்களிடம் இல்லாதவைகளுமான |
| குணாந் | குணங்களை |
| அதிரோப்ய | ஆரோபம் செய்து |
| பணிதி: | பேசுவதுதான் |
| ஸ்தோத்ரம் யதி | ஸ்தோத்ரம் என்று சொல்லுகிறதென்றால் |
| தர்ஹி | அப்படியானல் |
| ஸா தா | அந்த ஸ்துதியும் |
| த்வயி | உன் விஷயத்தில் |

| | |
|---|---|
| வந்த்யா | அர்த்தமில்லாததாகவே இருக்கும். |
| அதோ | அல்லது |
| ஸம்யக் ஸத்ய குண அபிவர்ணனம் | உள்ளபடியே (துதிக்கப்படுகிறவர்களிடம்) உண்மையாயிருக்கிற குணங்களைமுற்றிலும் சொல்வது |
| ஸ்தோத்ரம் ப்ரூயு: | ஸ்தோத்ரமென்று சொல்வார்களேயானல் |
| தாத்ருசீ வாக் | அப்படிப்பட்ட வாக்கானது |
| த்வத் ஸத் குண அர்ணோநிதௌ | உன்னுடைய ஸமுத்ரம்போன்ற கல்யாண குணங்கள் விஷயத்தில் |
| வாசஸ்பதிநா அபி | பிருஹஸ்பதியாலும் கூட |
| கதம் சக்ய ரசநா | எப்படி ப்ரயோகம் செய்யப்பட முடியும்? |

இப்படித் துதிசெய்வதற்கீடான வாக்கு முதலாகப் பரமபதத்திலே சென்று நித்யகிங்கரனுகுமளவுமுள்ள தன்னபிமதங்களையெல்லாம் வேண்டிக்கொண்ட பிறகு, உன்னைத் துதிசெய்வதென்பதே ஒருவருக்கும் இயலாத கார்யமென்கிருரிதில்.

ஸ்தோத்ரம் நாம:—ஹே தேவியே! உன்னை ஸ்தோத்ரம் செய்வது என்பது ஒருவருக்கும் இயலாத செயலே. ஏனெனில் ஸ்தோத்ரம் என்பதற்குப் பொருள் என்னவென்று ஆலோசித்தால் அப்பொருள் உன்பால் மிகவும் அஸம்பாவிதமாயிருக்கிறதென்கிருர். எப்படி என்னில், உலகில் ஸகலத்தையுமறிந்த கவிகள் ஸ்தோத்ரம் என்ருல் என்னவென்று சொல்லுகிருர்கள்? (ஸ்தோத்ரம் என்பதற்கு லக்ஷணம் என்ன என்றபடி) உலகில் அனேக ப்ரபுக்களை அன்ன வஸ்திரத்திற்காக மாரியனையகை, மால்வரையொக்கும் திண்டோள், தாமரைக்கண்ணன், மதியன்னமுகத்தான் எனப் பலவாருகத் துதிக்கிருர்கள். உண்மையில் அவன்

மேகம்போல் வர்ஷிக்கிற கையுள்ளவனுமல்ல. மலைபோன்ற தோளுடையவனுமல்ல. தாமரைக் கண்ணனும் அல்ல. சந்திரன் போன்ற முகத்தனுமல்ல. எல்லாம் பச்சைப் பசும் பொய். ஆனால் இப்படிச் சொல்வதையே ஸ்தோத்திரம் என்கிறார்கள். ஆதலால் ஒருவனிடம் இல்லாத குணங்களை இருப்பதாக ஏறிட்டுச் சொல்வதுதான் ஸ்தோத்ரம் எனப்படும். ஆகவே துதிசெய்யப்படுகிறவனிடம் இல்லாதவைகளாயும் மற்றவர்களிடம் இருப்பவையுமானகுணங்களை துதிக்கப்படுகிறவனிடம் ஏறிட்டுச் சொல்வதுதான் ஸ்தோத்திரம் என்று தீர்ந்தது. அப்படியாகில் அது பெரியபிராட்டியாரிடம் அஸம்பாவிதம். ஏனெனில் அப்பிராட்டியைத் துதிப்பது என்றால் அவளிடம் இல்லாதவைகளாயும் மற்றவர்களிடம் இருப்பவையுமான குணங்களை அவளிடம் ஏறிட்டுக்சொல்வது என்பதாயிற்று. இது பிராட்டியிடம் எங்ஙனம் பொருந்தும். பிராட்டியிடம் இல்லாத குணங்களே உலகில் கிடையா. அப்படிக்கிருக்க மற்றவரிடம் எங்ஙனமிருக்கப்போகின்றன. பிராட்டி கல்யாண குணங்கள் எல்லாவற்றிற்கும் கடல் போன்றவளாயிற்றே. ஆதலால் ஸமஸ்த கல்யாணகுணகணபரிபூர்ணையான பிராட்டியிடம் இல்லாத குணங்களைப் பேசுவதென்கிற ஸ்தோத்ரம் அர்த்தமற்றதாகும்.

ஸ்தோத்ரம் என்பது இல்லாத குணங்களை இருப்பதாகப் பேசுவதல்ல. ஒருவனைத் துதிப்பது என்றால் அவனிடம் உள்ள குணங்களனைத்தையும் உள்ளபடியே பேசுவதுதான் என்று எங்கள் கொள்கை. ஆதலால் ஸ்தோத்ரம் என்பதற்கு ஒருவனிடமுள்ள ஸகல குணங்களையும் உள்ளபடியே சொல்லுவது என்று பொருள்; என்று வேறுவகையாகக் கவிகள் சொல்லுவார்களாகில், அதுவும் பிராட்டியிடம் அஸம்பாவிதம் என்கிறார் பின்னடிகளால். பிராட்டி

யிடம் உள்ள குணங்கள் எண்ணற்றவை. ஒவ்வொரு குணத்தையும் உள்ளபடியே வர்ணிப்பது என்கிற ஸ்தோத்ரம் பிராட்டியிடம் பொருளற்றதாகவே பர்யவஸிக்கும். அவளது குணங்களை வர்ணிக்க பிருஹஸ்பதியும் சக்தியற்றவரே. ஆதலால் ஸ்தோத்ரம் என்பதற்கு இருவகையாகப் பொருள் வரைந்தாலும் பெரிய பிராட்டியாரிடம் ஸ்தோத்ர சப்தம் அந்வர்த்தமாகாது என்றார். லக்ஷ்மீதேவியாரின் குணங்களை ஒருவரும் பேசிமுடிக்க வல்லவரல்லர் என்பது இப்பத்யத்திற்குத் திரண்டபொருள். நதே வர்ணயிதும் சக்தா குணந் ஜிஹ்வாபிவேதஸ:॥ ப்ரஹ்மாத்யாஸ் ஸகலாதேவா: முநயச்சதபோதநா:। த்வாம் ஸ்தோதுமபி நேசாஸ்த்வத்ப்ரஸாதலவம் விநா ॥ ஹே தேவியே உனது குணங்களை வர்ணிப்பதற்கு பிரமதேவனுடைய நாக்குகளும் சக்தியற்றவை. பிரமன் முதலிய ஸகலதேவர்களும் தவத்தைப் பொருளாகக் கொண்ட முனிவர்களும் உனது அநுக்ரஹம் இல்லாவிடில் உன்னைத் துதிப்பதற்கும் திறமையற்றவர்கள்; எனப்பொருள்கொண்ட பிரமாணங்கள் இங்கு கவனிக்கத்தக்கவையாகும். (3)

ये वाचां मनसां च दुर्ग्रहतया ख्याता गुणा स्तावका
स्तानेव प्रति सांबुजिह्वमुदिता हैमामिका भारती ।
हास्यं तत्तु न मन्महे नहि चकोर्यैकाऽखिलां चन्द्रिकां
नाऽलंपातुमिति प्रगृह्य रसना मासीत सत्यां तृषि ॥ ४ ॥

யே வாசாம் மனஸாம்ச துர்க்ரஹதயா
க்யாதா குணாஸ்தாவகாஸ்
தானேவ ப்ரதி ஸாம்பு ஜிஹ்வமுதிதா
ஹைமாமிகா பாரதீ ।

ஹாஸ்யம் தத்து ந மந்மஹே
நஹி சகோர்யேகா அகிலாம் சந்த்ரிகாம்
நாலம் பாதுமிதி ப்ரக்ருஹ்ய ரஸநா
மாஸீத ஸத்யாம்த்ருஷி" (4)

| | |
|---|---|
| யே தாவகா குணா: | எந்த உன்னுடைய கல்யாண குணங்கள் |
| வாசாம் மனஸாம் ச | வாக்குகளுக்கும் மனதிற்கும்கூட |
| துர்க்ரஹதயா | பிடிக்க முடியாதவைகளென்று |
| க்யாதா: | ப்ரஸித்தி அடைந்திருக்கின்றனவோ; |
| தாந் ஏவ ப்ரதி | அந்த குணங்களையே உத்தேசித்து |
| மாமிகா பாரதீ | என்னுடையதான வாக்கு |
| ஸாம்பு ஜிஹ்வம் | ஜலத்துடன்கூடியதான நாக்கையுடைத்தாயிருக்கும்படிக்கு |
| உதிதா | ஸ்தோத்ரம் செய்வதற்கென்று ப்ரவ்ருத்தி செய்தது, |
| ஹை | ஆச்சர்யம் |
| தத் து | அப்படி ப்ரவ்ருத்திப்பட்டதையும் |
| ஹாஸ்யம் | பரிஹாஸத்திற்கு இடமென்று |
| ந மந்மஹே | (நாம்) நினைக்கவில்லை. |
| ஹி | ஏனென்றால் |
| ஏகா சகோரீ | ஒரு சகோர பக்ஷியானது |
| த்ருஷி ஸத்யாம் | விடாய் இருக்கும்பொழுது |
| அகிலாம் சந்த்ரிகாம் | நிலவு முழுவதையும் |
| பாதும் ந அலம் இதி | பானம் செய்யமுடியாதென்று (நினைத்து) |
| ரஸநாம் ப்ரக்ருஹ்ய | நாக்கை உள்ளே இழுத்துக்கொண்டு |
| ந ஆஸித | (வெறுமனே) உட்கார்ந்துகொண்டு இருக்கவில்லையோ. |

பிராட்டியின் குணங்கள் அளவற்றன. எண்ணற்றன. ஒருவராலும் பேசமுடியாது என்று கீழே பேசினர். இப்

படிப் பேசிய நீர் துதிசெய்ய ப்ரவ்ருத்தித்தது எப்படி என்று சிலர் வினவ அதற்குவிடை கூறுகிறார்.

யேவாசாம்:— "யதோவாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ" என்றபடி லக்ஷ்மியின் குணங்கள் வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாதவைகளென்பது மிகப் பிரஸித்தமே. அந்த குணங்களையே பேசவேண்டுமென்று எனது வாக்கு ஜலம் ஊறுகிற நாக்குடன் ப்ரவ்ருத்தித்தது. இப்படி எனது வாக்கு ப்ரவ்ருத்தி செய்த விஷயம் உலகத்தாரால் பரிஹஸிக்கப்படும். என்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், ஒரு உதாஹரணம் காட்டுகிறேன் கேளுங்கள். சகோரப்பக்ஷி நிலவைத்தின்னும் என்பது பிரஸித்தம். ஒரு பெண் சகோரப்பக்ஷி நிலவைச் சாப்பிட ப்ரவர்த்திக்கிறது. அது தான்மட்டில் சந்திரனது நிலாவை முற்றிலும் சேஷமின்றிப் பருகிவிடவேண்டுமென்று நினைக்கிறது. அப்படியாகில் அது முழு நிலவையும் நாம் பருக முடியாதென்று நினைத்துத் தனக்கு விடாயிருந்தபோதிலும் தனது நாக்கை உள்ளே இழுத்துக்கொண்டு வெறுமனே இருக்கவேணும். அப்படி அப்பறவை இருப்பதில்லை. அது தனது தாஹத்தைப் போக்குகிறதற்கு வேண்டுமளவுமே நிலவை அருந்துகிறது. அதுபோல் அடியேனும் அப்பிராட்டியைத் துதிக்கவேணுமென்கிற ஆவலென்கிற தாஹத்தைப் பரிஹரிக்க வேண்டி அடியேனுக்கு முடிந்தவளவில் அவளது குணங்களைப் பருகுகிறேன். குணங்கள் அபரிச்சின்னங்களானல் எனக்கென்ன? நான் விரும்புவது தாஹசாந்தியை. அதற்கு வேண்டியவளவு நான் அநுபவிக்கிறேனென்றார்.

ஸாம்புஜிஹ்வம் :— ஒருவன் ஒரு பொருளில் தனக்குள்ள அதிக ஆவலைக் காண்பிக்குங்கால் "எனது நாக்கில் ஜலம் ஊறுகிறது" என்று சொல்வான். அதன்படி

லோகோக்தி "ஸாம்புஜிஹ்வம்" என்பது. லக்ஷ்மீதேவியைத்துதிக்கவேணுமென்ற தனது பேராசையைக் காட்டுகிறது. (4)

क्षोदीयानपि दुष्टबुद्धिरपि निस्नेहोाप्यनीहोपि ते
कीर्तिंदेवि लिहन्नहं नचबिभेम्यज्ञो न जिह्रेमि च ।
दुष्येत्सातु न तावता नहि शुना लीढाऽपि भागीरथी
दुष्येच्छ्वापि न लज्जते न च बिभेत्यार्तिस्तु शाम्येच्छुनः॥

க்ஷோதீயாநபி துஷ்டபுத்திரபி
நிஸ்நேஹோப்ய நீஹோபி தே
கீர்த்திம் தேவி லிஹந்நஹம் நச
பிபேம் யஜ்ஞோ ந ஜிஹ்ரேமி ச ।
துஷ்யேத் ஸாது ந தாவதா
நஹி சுநா லீடாபி பாகீரதீ
துஷ்யேச்ச்வாபி ந லஜ்ஜதே
நச பிபேத்யார்த்திஸ்து சாம்யேச் சுந:॥

| | |
|---|---|
| தேவி | ஹே தேவியே ! |
| க்ஷோதீயாந் அபி | மிகவும் அல்பனையும் |
| துஷ்ட புத்தி: அபி | கெட்டபுத்தியுள்ளவனையும் |
| நிஸ்நேஹ: அபி | உன்னிடம் பக்தியில்லாதவனையும் |
| அநீஹ; அபி | (உனக்குப் பணிவிடை செய்யாதவனையும் இருந்தபோதிலும் |
| தே | உன்னுடைய |
| கீர்த்திம் | புகழை |
| லிஹந் | அருந்துவதற்கு விரும்பும் |
| அஜ்ஞ: அஹம் | அறிவிலியான நான் |

| | |
|---|---|
| ந ச பிபேமி | பயப்படுகிறதுமில்லை |
| ந ஜிஹ்ரேமி ச | வெட்கப்படுகிறதுமில்லை |
| தாவதா | நான் அருந்துவதால் |
| ஸா து | அந்தக் கீர்த்தியும் |
| நதுஷ்யேத் | தோஷமுள்ளதாகமாட்டாது. |
| பாகீரதீ | கங்காநதியானது |
| சுநா லீடா அபி | நாயால் பானம் செய்யப்பட்டாலும் |
| நதுஷ்யேத் | தோஷத்தை அடைந்ததாகமாட்டாது |
| ச்வா அபி | நாயும் |
| ந லஜ்ஜதே | வெட்கமடைகிறதில்லை. |
| நச பிபேதி | பயப்படுகிறதுமில்லை. |
| சுந: | நாயினுடைய |
| ஆர்த்தி: து | தாஹமோவென்றால் |
| சாம்யேத் | ஓய்வை அடையும். |

ஸர்வப்ரகாரத்தாலும் நீசனான தான் ஸர்வப்ரகாரத்தாலும் உயர்ந்தவளான பெரிய பிராட்டியாரைத் துதிசெய்வது தகுதியல்லவே என்று நினைத்து வெட்கப்பட்டார். பயந்தார். மேலும் அழுக்குடம்பு எச்சில் வாயால் தூய்மையிலாத நாம் அவளைத் துதிசெய்தால் அம்ருதத்தில் விஷத்தைக் கலப்பதுபோல் அப்பிராட்டிக்குத் தீங்கு விளைவித்ததாகுமே; என்று கலங்கினார். பிறகு ஒருவாறு தேறுதலடைந்து நாம் அப்பிராட்டியைத் துதிப்பது நமக்குத் தகுதியானதே. நாம் வெட்கமடையவேண்டியதில்லை. பயப்படவேண்டியதுமில்லை. நாம் துதிசெய்வதால் அவளுக்குக் குறைவொன்றும் வாராது; எனத்தீர்ந்தார். இப்படித்தான் கலங்கித் தெளிந்த தனது தசையைத் தெரிவிக்கிறார் இப்பத்யத்தில்.

கூேஷாதீயாநபி :—ஹே தேவியே! நான் மிகுந்த அல்பனும் கெட்டபுத்தியையுடையவனும் உன்னிடம் பக்தி இல்லாதவனும் உனக்குப் பணிவிடை செய்யாதவனும் இருந்தபோதிலும் உன்னுடைய கல்யாணகுணங்களைத் துதி செய்து அநுபவிக்கவேணுமென்று ஆவல்கொண்டமூடனான நான் பயமடையவுமில்லை. வெட்கப்படவுமில்லை. ஸர்வ ப்ரகாரத்தாலும் தாழ்மையுள்ள ஒரு நாய் ஸர்வப்ரகாரத்தாலும் பரமபவித்ரமான கங்காநதியிலே மூழ்கி ஜலத்தையும் பானம் செய்கிறது. அதனாலந்த நதி தோஷத்தையடையவுமில்லை. தீண்டாததாகுமாகிறதில்லை. அந்த நாயும் நான் இந்நதியைத் தொடுவது தகுதியாவென்று நினைத்து பயப்படுகிறதுமில்லை. வெட்கப்படுகிறதுமில்லை. ஆனால் நாய் ஒரு பயனையடைவதுண்டு. அந்நாயின் தாபமெல்லாம் மூழ்கினவாறே தொலைந்துவிடுகிறது. அதுபோல் நீசனான நானும் கங்கைபோல் யாவரையும் சுத்தமாக்க வல்ல பிராட்டியின் குணங்களைப் பாடித்துதிக்கலாம். அப்பிராட்டிக்கும் ஒரு குறைவும் வாராது. நம்முடைய ஸம்ஸாரதாபமெல்லாம் தொலையும். ஆதலால் நமது தாபத்ரயத்தைத் தொலைத்துப் பரமானந்தமடைய வேண்டிப் பெரிய பிராட்டியாரைத் துதிப்பது நமக்கு ப்ராப்தமான கைங்கரியமே என்று சொல்லி, தான் ஸ்தோத்ரம் செய்யவேணுமென்று துணிந்ததைப் பேசினார்.

ஸகல கல்யாண குணங்களாலும் பரிபூர்ணரான கூரத்தாழ்வான் தன்னை இங்ஙனம் இகழ்வாகப் பேசிக்கொண்டது, உண்மையில் தாழ்ந்தவர்களான நாம் உண்மையில் நம்மிடமுள்ள குற்றங்களை தாமரையாள் கேள்வனிடம் விண்ணப்பம் செய்துகொள்ளவேணுமென்பதை நமக்குக் காட்டிக்கொடுத்தபடியாகும். (5)

ऐश्वर्यं महदेववा ऽल्पमथवा दृश्येत पुंसां हि यत्
तल्लक्ष्म्यास्समुदीक्षणात्तव यतस्सार्वत्रिकं वर्तते ।
तेनैतेन न विस्मयेमहि जगन्नाथोऽपि नारायणो
धन्यं मन्यतईक्षणात्तव यतस्स्वात्मानमात्मेश्वरः ॥ ६ ॥

ஐச்வர்யம் மஹதேவ வால்பமதவா
த்ருச்யேத பும்ஸாம் ஹி யத்
தல்லக்ஷ்ம்யாஸ் ஸமுதீக்ஷணாத் தவ
யதஸ் ஸார்வத்ரிகம் வர்த்ததே ।
தேநைதேந ந விஸ்மயேமஹி
ஜகந்நாதோபி நாராயணோ
தந்யம் மந்யதஈக்ஷணாத் தவ
யதஸ் ஸ்வாத்மாந மாத்மேச்வர: ॥

| | |
|---|---|
| ஸார்வத்ரிகம் | இவ்வுலகத்திலும் மேலுலகங்களிலும் ஆக எல்லாவிடங்களிலும் உள்ள |
| பும்ஸாம் | புருஷர்களுடைய |
| யத் ஐச்வர்யம் | எந்த செல்வமானது |
| மஹத் ஏவ | மிகவும் அதிகமாகவோ |
| அதவா அல்பம் வா | அல்லது குறைவுள்ளதாகவோ |
| த்ருச்யேத | காணப்படுமோ; |
| தத் | அந்த செல்வமானது |
| லக்ஷ்ம்யா: தவ | லக்ஷ்மீயென்று திருநாமமுள்ள உன்னுடைய |
| யத: ஸமுதீக்ஷணாத் | எந்த கடாக்ஷத்தினால் |
| வர்த்ததே | உண்டானதாகவிருக்கிறதோ; |
| தேந ஏதேந | அப்படிப் பெருமையுள்ள உனது பார்வையால் |

| | |
|---|---|
| நவிஸ்மயே மஹி | (நாங்கள்) ஆச்சரியமடைவதில்லை. |
| யத: | ஏனெனில் |
| ஜகந்நாத: | உலகங்களுக்கு ஸ்வாமியாயும் |
| ஆத்மேச்வர: | ஆத்மேச்வரன் என்று வேதாந்தத்தில் ஓதப்பட்டவனுமான |
| நாராயண: அபி | நாராயணனும் |
| ஸ்வாத்மானம் | தனது ஸ்வரூபத்தை (திருமேனியை) |
| தவ ஈக்ஷணாத் | உன்னுடைய பார்வையினலே |
| தந்யம் மந்யதே | பாக்யமுள்ளதாக நினைக்கிருனே; |

இப்படித் துதிசெய்வதற்கு வேண்டிய பிரஸ்தாவனையைச்சொல்லி முடித்துவிட்டு இச்சுலோகம் முதலாக ஸ்தோத்ரம் செய்யத் தொடங்குகிருர்.

ஐச்வர்யம்:— இவ்வுலகத்திலோ அல்லது ஸ்வர்கம் முதலான வேறு லோகங்களிலோ ஒவ்வொரு சேதனர்களுக்கும் குறைவாகவோ மிகுதியாகவோ எவ்வகைப்பட்ட செல்வம் காணப்படுகிறதோ; அச்செல்வமெல்லாம் லக்ஷ்மீதேவியின் கடைக்கண் பார்வையால் உண்டாகி நடமாடுகிறது என்பது ஒரு வியப்பைத்தரும் விஷயமல்ல; ஏனெனில் லோகநாதனுயும் தனக்கு நாதனெருவனில்லாதபடி ஸ்வதந்த்ரனுயும் தன்னேடொத்தார் மிக்கார் இல்லாத பரமபுருஷனுமான நாராயணனும் லக்ஷ்மீதேவியின் கடாக்ஷம் தன்மேல் விழுந்தால் தன்னைப்பெரும் பாக்யசாலியாக நினைத்துக்கொள்கிருன். இப்படி ஜகத்காரணமாயும் ஜகத்ரக்ஷணா ஸம்ஹாராதி காரியங்களை தானிட்ட வழக்காய் நடத்துகிறவனுயும் "நாராயண பரம்ப்ரஹ்ம" தத்வம் நாராயண: பர:, பதிம் விச்வஸ்ய ஆத்மேச்வரம் என்று சுருதிகளால் கொண்டாடப் பட்டவனுமான புருஷோத்தமனே "ஆநந்தோ ப்ரஹ்ம" "ரஸோவை ஸ:" என்று சுருதிகள் ஸசிர:கம்பம் அநுபவிக்கிற

தன்னையே அந்த தேவியின் கடைக்கண் பார்வையால் தன்யனென்று நினைப்பதக்குக் காரணம் தனது செல்வமும் அப்பிராட்டியின் கடாக்ஷத்தாலே பொருந்தியிருக்கிறது என்று கருத்துக்கொண்டதன்றோ? ஆதலால் பரதேவதையான பரமபுருஷனே திருமகளால் தன்னைப் பாக்யசாலியாகக் கருதினால் மற்ற பிரமன் முதலானவர்களுடைய அல்பமான ஐச்வர்யம் அவளதீனமென்பது ஒரு ஆச்சர்யப்படத் தகுந்த விஷயமா? என்றார். இத்தால் ப்ரம்மாதி தேவர்கள் அனைவருடைய செல்வமும் பிராட்டியின் கடாக்ஷத்தாலே விளைந்ததென்றும் புருஷோத்தமனுக்கும் அப்பிராட்டியின் சேர்த்தியாலேதான் பெருமை என்பதும் சொல்லப்பட்டது.

ஆத்மேச்வர:—ஆத்மநாம்+ஈச்வர; ஸகல ஜீவாத்மாக்களையும் அடக்கி ஆள்கிற ஸ்வாமி. ஆத்மநோபி+ஈச்வர:= தனக்குமேல் ஒரு ஈச்வரன் இல்லாதபடி ஸ்வதந்த்ரனான ஸ்வாமி.

ஆத்மநா+ஈச்வரன். ஸ்வபாவத்தாலேயே ஈச்வரன் ஒரு ஸாதனத்தைச் செய்து ஈச்வரனாய் வந்தவனல்ல. நித்ய ஸித்தனான ஈச்வரன் எனப் பலவகையாகப் பொருள் கொள்க.

121053

தந்யம் மந்யதே:—திருமாலும் பெரிய பிராட்டியாருடைய சேர்த்தியால் தன்னை பாக்யசாலியாகக் கருதுகிறான் என்பது; அவளுடைய பிரிவிலே வருந்துவதாலும் சேர்த்தியிலே உகப்பதாலும் தெளியத் தெரியவரும். ஸ்ரீ ராமபிரான் மிதிலைச் செல்வியைப்பிரிந்து வருந்தியது சொல்வதற்களவன்று. "வல்மீகஜன்மமுநிரேவ கடோரசேதா:" என்று சொல்லும்படி கேட்டார் மனம் இரு பிளவாய்ப் போகும்

படி ஆயிற்று. மீண்டும் பிராட்டியுடன் புஷ்பக விமானத்தில் ஏறி எழுந்தருளும்கால் பிராட்டியை நோக்கி **ஏஷ ஸேதுர் மயா பத்த: ஸாகரே ஸலிலார்ணவே | தவ ஹேதோ: விசாலாக்ஷி நள் ஸேதுஸ்ஸுதுஷ்கா:** ஸகரனால் வெட்டப்பட்ட கடலில் மனத்தாலும் நினைப்பதற்கரிதான செயலான இவ்வணை உன்பொருட்டு நளனைக்கொண்டு என்னால் கட்டப்பட்டது என்றார். **தவ ஹேதோ:** என்கிற பதங்களை ஆராய்ந்தால் பெருமாளுக்குப் பிராட்டியின் சேர்த்தியிலே உள்ள உகப்புத் தோன்றும். மற்றும் **நேதாநீம் த்வத்ருதே ஸீதே ஸ்வர்கோபி மமரோசதே** என்று இப்பொழுது உன்னைவிட்டுப் பிரிந்தால் கலங்காப் பெரு நகரான பரமபதமும் எனக்கு போக்யமல்ல''வென்று மற்றுமோரிடத்தில் பிராட்டியிடம் பேசுகிறார். ஆதலால் திருமால் திருமகள் சேர்த்தியாலே தான் தன்னை தன்யனாக நினைக்கிறானென்று கொண்டுதான் ஆழ்வார்களும் அச்சேர்த்தியழகை அநுபவித்து, திகழ்கின்ற திருமார்வில் திருமங்கை தன்னோடும் திகழ்கின்ற திருமால் என்றும் மையகண்ணாள் மலர் மேலுறைவாள் உறைமார்ப''னென்றும் செய்யாள் திருமார்பினில் சேர் திருமால்'' என்றும் என் திருமகள் சேர்மார்பன்'' என்றும் உனக்கேற்கும் கோலமலர் பாவைக்கு அன்பா'' என்றும் பலபடியாகப் பாடி நின்றார்கள்.

**தேவதானவ யத்நேந ப்ரஸூதா அம்ருத மந்தனே** இவளைப் பெறுவதற்குப்பட்டபாடு அம்ருதமதந காலத்தில் அறியப்பட்டதன்றோ ? **யதர்த்தம் அம்போதிரபந்தி அமந்திச** எவள் பொருட்டு கடல் அடைக்கப்பட்டதோ, கடையவும் பட்டதோ; என்றார் ஆளவந்தார். ஆதலால் பரமபுருஷன் பிராட்டியின் பார்வையால் தன்னையும் பெருமையுள்ளவனாய் நினைக்கிறானென்பது ஸுவ்யக்தம்.

ऐश्वर्यं यदशेषपुंसि विदितं सौन्दर्यलावण्ययो
रूपं यच्च हि मङ्गळं किमपि यल्लोके सदित्युच्यते ।
तत्सर्वं त्वदधीनमेव यदतश्श्रीरित्यभेदेन वा
यद्वा श्रीमदितीदृशेन वचसा देवि प्रथामश्नुते ॥ ७ ॥

ஐச்வர்யம் யதசேஷ பும்ஸி
விதிதம் ஸௌந்தர்யலாவண்யயோ
ரூபம் யச்ச ஹி மங்களம்
கிமபி யல்லோகே ஸதித்யுச்யதே |
தத்ஸர்வம் த்வததீனமேவ
யதத: ச்ரீரித்யபேதேந வா
யத்வா ச்ரீமதி தீத்ருசேந வசஸா
தேவி ப்ரதாமச்நுதே ॥ (7)

| | |
|---|---|
| ஹே தேவி | ஒ லக்ஷ்மீதேவியே |
| அசேஷ பும்ஸி | ஸகல புருஷர்களிடத்திலும் |
| யத் ஐச்வர்யம் | எந்த செல்வம் |
| விதிதம் | அறியப்பட்டிருக்கிறதோ; |
| லோகே | உலகத்தில் |
| ஸௌந்தர்ய லாவண்யயோ: | அவயவங்களுடைய அழகு, உடம்பின் அழகு இவைகளுடைய |
| யத் ரூபம் ச | யாதொரு ஸ்வரூபமுண்டோ; |
| யத் மங்களம் ச | எது மங்களமான பொருளோ; |
| யத் கிம் அபி | எந்த வஸ்துவானது |
| ஸத் | ஸத்தையுள்ளது |
| இதி உச்யதே | என்று சொல்லப்படுகிறதோ; |
| தத் ஸர்வம் | அவைகெளல்லாம் |

| | |
|---|---|
| யத: | யாதொருகாரணத்தால் |
| த்வதீனம் ஏவ | நீ இட்ட வழக்காயிருக்கிறதோ; |
| அத: | அந்த காரணத்தால் |
| தத் | அந்த வஸ்துவானது |
| அபேதேந ச்ரீ: இதி | { பிரித்துச் சொல்லாமலே ஸ்ரீ: என்றோ |
| யத்வா | இல்லாவிடில் |
| ஸ்ரீமத் இதி | ஸ்ரீமத்என்ற |
| ஏதந்சேந வசஸாவா | இந்த வார்த்தையாலேயாவது |
| ப்ரதாம் | ப்ரஸித்தியை |
| அச்நுதே | அடைகிறது. |

ஐச்வர்யம் யதசேஷபும்ஸி:— ஸகலசேதனர்களிடத்திலும் யாதொரு செல்வமானது பிரஸித்தமாயிருக்கிறதோ அவ்வண்ணமே எவனுடைய ஸௌந்தர்யம் (அவயவங்களுடைய அழகு) லாவண்யம் (உடம்பின் ஸமுதாய சோபை) இவைகளுடைய ஸ்வரூபம் மிகவும் சிறந்ததென ப்ரஸித்தமாயிருக்கிறதோ; உலகில் எது மங்களகரமான வஸ்துவென்று சொல்லப்படுகிறதோ; மேலும் எந்தப் பொருளை மிகவும் நல்லதென்று சொல்லுகிறார்களோ; அவைகள் எல்லாம் ச்ரீ: என்றோ ச்ரீமத் என்றோ பிரஸித்தமாய் எல்லாராலும் வழங்கப்படுகிறது. அதற்குக் காரணம் அவைகளெல்லாம் உனக்கதீனமாயிருப்பதுதான். ஆனதுபற்றியே உனக்குப் பெயரான ச்ரீ: என்ற பதத்தைக்கொண்டே யாவரும் வ்யவஹரிக்கிறார்களென்றபடி.

ஒருவன் மிகுந்த அழகுள்ளவனாயிருந்தால் அவனை ஸ்ரீமான் என்று சொல்லுகிறார்கள். மிகுந்த செல்வமுள்ளவனாயிருந்தால் ஸ்ரீமான் என்கிறார்கள். ஸ்ரீமான் ச்ரீயை

உடையவன் எனப்பொருள். அப்பொழுது அவனது செல்வமும் அழகும் ச்ரீ: எனக் கருதப்படுகிறது. லக்ஷ்மீதேவியைச் சொல்லுகிற ச்ரீ: என்ற பதத்தாலேயே செல்வத்தையும் அழகையும் சொல்லுகிறார்கள். அதற்குக் காரணம் செல்வத்தையும் அழகையும் லக்ஷ்மீதேவியையும் ஒன்றாகக் கருதுவதே. அப்படிக் கருதுவதற்குக் காரணம் லக்ஷ்மீ தேவி இட்ட வழக்கமாய் அவளதீனமாய் அவைகள் இருப்பதுதானென்றபடி.

இம்மாதிரி உலகிலுள்ள ஒரு நல்ல பொருளையோ மங்களமான வஸ்துவையோ இது ஶ்ரீமத்தான பொருள். ச்ரீயுடன் கூடியது என்று அப்பொருளிலுள்ள நன்மையையும் மாங்கள்யத்தையும் லக்ஷ்மீயாகக்கொண்டு லக்ஷ்மியுடன் கூடியது என்று வ்யவஹரிக்கிறார்கள். உனது பெயரையிட்டுச் சொல்வது அவைகளுக்கு உன்னால் வந்த உயர்வைக் காண்பிக்கிறது. ஆதலால் செல்வமும் அழகும் மங்கள வஸ்துக்களும் உலகிலுள்ள நல்ல பொருள்களும் பிராட்டிக்கதீனங்களென்பது பேசப்பட்டது. (7)

देवि त्वन्महिमावधिर्न हरिणा नापि त्वया ज्ञायते
यद्यप्येवमथापि नैव युवयो स्सर्वज्ञता हीयते ।
यन्नास्त्येव तदज्ञता मनुगुणां सर्वज्ञताया विदुः
व्योमांभोज मिदंतया खलु विदन्भ्रान्तोयमित्युच्यते ॥ ८ ॥

தேவி த்வந்மஹிமாவதிர்நஹரிணா
நாபி த்வயா ஜ்ஞாயதே
யத்யப்யேவ மதாபி நைவயுவயோ
ஸ்ஸர்வஜ்ஞதா ஹீயதே |

யந்நாஸ்த்யேவ ததஜ்ஞதா மநுகுணம்
ஸர்வஜ்ஞதாயா விது:
வ்யோமாம்போஜ மிதம்தயா
கலுவிதந் ப்ராந்தோயமித்யுச்யதே ‖ (8)

| | |
|---|---|
| ஹே தேவி | ஜகத் ஸ்ருஷ்ட்யாதி லீலைகளை செய்பவளே! |
| த்வம் மஹிமாவதி: | உன்னுடைய பெருமையின் எல்லையானது |
| ஹரிணா | விஷ்ணுவினாலும் |
| யத்யபிநஜ்ஞாயதே | அறியப்படவில்லை தான். |
| த்வயா அபி | உன்னாலும் |
| யதி அபிந ஜ்ஞாயதே | அறியப்படவில்லை தான். |
| ஏவம் அத அபி | இப்படியிருந்தபோதிலும் |
| யுவயோ: | உங்களுடைய |
| ஸர்வஜ்ஞதா | ஸகலத்தையும் அறிந்தவர்களென்கிற தன்மை |
| ந ஏவ ஹீயதே | குறைகிறதேயில்லை |
| யத் | எந்தப்பொருள் |
| ந அஸ்தி ஏவ | (உலகில்) உண்மையில்கிடையாதோ |
| ததஜ்ஞதாம் | அதைத் தெரிந்துகொள்ளாமலிருப்பதை |
| ஸர்வஜ்ஞதாயா: | எல்லாவற்றையுமறிந்தவனுயிருக்கும் தன்மைக்கு |
| அநுகுணம் | அநுகூலமென்றே |
| விது: | (பெரியோர்கள்) சொல்லுகிறார்கள். |
| வ்யோம அம்போஜம் | ஆகாசத்தாமரைப் புஷ்பத்தை |
| இதம்தயா | இந்தவிதமாயிருக்கிறதென்று |
| விதன் | தெரிந்துகொண்டவன் |

| | |
|---|---|
| **அயம்** | இவன் |
| **ப்ராந்த:** | பித்தன் |
| **இதி** | என்று |
| **உச்யதே கலு** | (எல்லோராலும்)சொல்லப்படுகிருனல்லவா. |

இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த பிராட்டியாரின் ஐச்வர்யம் அப்பிராட்டியாலும் அவள் கேள்வனுன நாராயணனுலும் அளக்க முடியாததாகுமென்கிருரிதில்.

தேவி:— ஹே லக்ஷ்மீதேவியே! லீலாவிபூதி நித்ய விபூதி என்கிற விபூதிகளிரண்டுக்கும் ஸ்வாமினீ என்கிற உனது பெருமையின் எல்லை நிலத்தை உன்னுலும் அறிய முடியாது. உன் கணவனுலும் அறியமுடியாது. எல்லா உலகங்களையும் படைத்துக்காத்தழிக்கும் சக்திவாய்ந்தவனும் ஸர்வஜ்ஞனும் உன்னைவிட்டுப் பிரியாமலிருப்பவனுமான புருஷோத்தமனே உனது பெருமையை இவ்வளவுதான் என்று அளவிட்டு அறிய முடியாதவனுயிருக்கிருன். அப்படியே நீயும் உனது பெருமையை அளவிட்டு அறிய முடியாதவளாயிருக்கிருய்; என்று ஆழ்வான் விண்ணப்பம் செய்யவே பெருமாளும் பிராட்டியும் ஆழ்வானைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்கள். எங்களிருவருக்கும் ஸர்வஜ்ஞர்கள் என்று பிரஸித்தியுண்டு. அதாவது எல்லாவற்றையும் அறிந்தவர்களென்பது. எங்களுக்குத் தெரியாத விஷயமே கிடையாது என்பதும் அதில் அடங்கியதே. நீர் இப்பொழுது பிராட்டியின் பெருமையின் எல்லை உங்களுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டீரே. அதனுல் எங்களுக்கு ஸர்வஜ்ஞதை என்பது இழந்ததாய் விட்டதே; ஒரு விஷயம் தெரியாதபோனுலும் எல்லாம் தெரிந்தவன் என்கிற பெயருக்குக் குறைவுதானே. ஆகையால் எங்களுடைய ஸர்வஜ்

ஞதைக்குக் குறைவு வர எப்படிப்பேசினீர் என்று. அதற்கு ஆழ்வான் விடையளிக்கிறார் மேலடிகளால்.

பெரிய பிராட்டியாரின் பெருமையின் எல்லை நிலம் உங்களுக்குத் தெரியாது என்று நான் சொன்னது சொன்னது தான். உண்மையிலும் உங்களுக்கு அது தெரியாததே. ஆனாலும் உங்களுடைய ஸர்வஜ்ஞதை என்பதற்கு குறையொன்றும் வராது. உலகத்தில் "ஒருவன் ஒரு விஷயத்தை அறிந்தவன்" என்றால் அதற்குப் பொருள் என்ன? அவ்விஷயத்தை உள்ளபடியே அறிந்தானாகில் அதை அறிந்தவன் என்று சொல்கிறார்கள். அவ்விஷயத்தை அதுள்ளபடிக்கின்றி வேறுபாடாக அறிந்தானாகில் அவன் அதை அறிந்தவனல்ல. ஒரு உதாஹரணம் காட்டுவோம்.

ஒருவன் வ்ருக்ஷம் என்பது எனக்கு தெரியுமென்றால் அதனை நாம் வ்ருக்ஷம் எப்படி இருக்குமென்று கேட்டால் அவன் அடியிலே வேரும் மேலே கிளைகளும் இலைகளும் அடங்கியுள்ள ஒரு பொருள் என்று சொல்வானாகில் அவன் அறிந்தவன் என்று சொல்லப்படுகிறான். அப்படிக்கின்றி மேலே வேரும் அடியில் பூமியில் இலைகளும் உள்ளது வ்ருக்ஷம். நான் அப்படித்தான் பார்க்கிறேன். என்பானாகில் அவனை நாம் பித்தன் என்கிறோம். அதேமாதிரி ஒருவன் நான் முயலுக்கு கொம்பு இருப்பதை அறிந்திருக்கிறேன். மலடிக்குப் பிள்ளையைப் பார்த்திருக்கிறேன் என்றால் அவனை அறிந்தவனென்று சொல்லுவதில்லை. ஏன்? உலகில் இல்லாத பொருளை இருப்பதாக நினைத்தால் அது அறிவல்ல. அது பிரமம். ஆனதுபற்றி அவனை பித்தனென்று சொல்லுகிறோம். ஆகலால் ஒருபொருளை அறிந்தவன் என்பதற்கு உலகில் உண்மையிலுள்ள பொருளொன்றை அதுள்ளபடியே அறிகிறவன் எனப்பொருள். இம்மாதிரி

ஸர்வஜ்ஞன் (எல்லாவற்றையும் அறிந்தவன்) என்பதற்கு எல்லாப்பொருள்களையும் அவைகளின் தன்மைகளையும் உள்ளபடியே அறிந்தவன் எனப்பொருள். திவ்ய தம்பதிகளான நீங்கள் எல்லாவற்றையும் அறிந்தவர்களே. பிராட்டியின் பெருமைக்கு எல்லை நிலமிருந்தால் அதையும் அறிந்திருப்பீர்கள். இல்லாதவஸ்துவை உளதாக அறிந்தால் அது பிரமமல்லவா? இல்லாதபொருளை உளதாக அறிவது ஸர்வஜ்ஞதைக்குள் அகப்படாது. ஒருவன் ஆகாசத்தில் ஒரு தாமரை மலர் முளைத்ததைப் பார்த்தேன். மிகுந்த மணமுள்ளதாயிருந்தது. இதழ்கள் அடர்ந்திருந்தது. பொன்னிறமாயிருந்தது. என்று சொன்னாகில் உடனே இவன் அஸம்பாவிதமான பொருளைப் பேசுவதால் இவன் பித்துப் பிடித்தவன் என்று சொல்லி விடுவோம். அதன்படி, ஆகாசத் தாமரைப்போல் பிராட்டியின் பெருமையின் எல்லை நிலம் அஸம்பாவிதமான பொருள். அதை அறியாததால் குறைவு கிடையாது. இல்லாத பொருளை உளதென்றும் உள்ள பொருளை இலதென்றும் அறிவது அறிந்ததாகாது. ஆதலால் இல்லாத பொருளான பிராட்டியின் பெருமையின் எல்லையை நீங்கள் அறியாதது உங்களுடைய ஸர்வஜ்ஞதைக்குக் குறைவை உண்டுபண்ணாது.

இல்லாத பொருளை இல்லையென்றறிவது ஸர்வஜ்ஞதைக்கு அநுகுணமானதே' என்று உதாஹரணத்துடன் விளக்கிக் காட்டினார்.

ஆகவே பிராட்டியின் பெருமை அளவற்றது என்பது இச்சுலோகத்தில் விளக்கப்பட்டது.

ஆளவந்தார் யஸ்யாஸ்தே மஹிமான மாத்மந இவ த்வத் வல்லபோபி ப்ரபு: நாலம்மாது மியத்தயா நிரவதிம் நித்யாநுகூலம்

ஸ்வத: வாரீர் பெரிய பிராட்டியாரே! உமது கொழுநனை ஸர்வசக்தனை பெருமானும் ஸ்வபாவத்தாலேயே எப்பொழுதும் அநுகூலமான எல்லையற்ற உனது பெருமையை இவ்வளவு என்று அளவிட்டு அறியமுடியாதவனாய் இருக்கிறான். அவனுக்கு "தாம் தம் பெருமையறியார்" என்றபடி தன் பெருமை எப்படி அளவிட்டறிய முடியாதோ; அவ்வண்ணமே உனது பெருமையையும் அளவிட்டு அறியமுடியாதென்று பேசியதை ஸ்மரிக்கத் தகும்.

இங்கு சொல்லப்பட்ட பிராட்டியின் பெருமையாவது அவளது கல்யாணகுண யோகமும் உபயவிபூதி சேஷித்வமும்.

लोके वनस्पति बृहस्पति तारतम्यं यस्याः प्रसाद परिणाममुदाहरन्ति
सा भारती भगवती तु यदीय दासी तां देव देव महिषीं श्रियमाश्रयामः॥

லோகே வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம்
யஸ்யா: ப்ரஸாத பரிணாம மூதாஹரந்தி |
ஸா பாரதீ பகவதீ து யதீயதாஸீ தாம்
தேவதேவ மஹிஷீம் ச்ரியமாச்ரயாம: ‖ (9)

| | |
|---|---|
| லோகே | உலகத்தில் |
| வநஸ்பதி ப்ருஹஸ்பதி தாரதம்யம் | மிகவும் மூடன் மரம்போன்றவன், அறிவில் சிறந்த பிருஹஸ்பதி என்கிற வேற்றுமையானது |
| யஸ்யா: | எவளுடைய |
| ப்ரஸாத பரிணாமம் | அநுக்ரஹத்தின் ஏற்றத்தாழ்வாகிற மாறுதலடியாகவந்ததென்று |
| உதாஹரந்தி | சொல்லுகிறார்களோ; |
| ஸா பகவதீ | அந்த பூஜிக்கத் தகுந்த |

| | |
|---|---|
| பாரதீ து | ஸரஸ்வதீ தேவியும் |
| யதீயதாஸீ | எவளுடைய தாஸியோ |
| தாம் | அப்படிப் பெருமையுள்ள |
| தேவதேவ மஹிஷீம் | தேவர்களுக்கும் முழுமுதல் தேவனுடைய மஹிஷியான |
| ச்ரியம் | லக்ஷ்மியை |
| ஆச்ரயாம: | சரணமடைகிறோம். |

லோகே:— உலகத்தில் ஒருவன் மிகுந்த அறிவுள்ளவனயிருந்தால் அவனை பிருஹஸ்பதி என்று சொல்லி யாவரும் போற்றுகிறார்கள். ஒருவன் சிறிதும் அறிவில்லாதவனயிருந்தால் அவனை மரம் என்று சொல்லிப் பழிக்கிறார்கள். "கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையல்ல நல்லமரங்கள்— சபை நடுவே நீட்டோலை வாசியா நின்றான், குறிப்பறியமாட்டாதவன் மரம்" என்கிற மூதுரையையும் காண்க. ஆதலால் அறிவற்றவைகளுள் சிறந்தது மரம். அறிவுள்ளவர்களுள் சிறந்தவர் தேவகுருவான பிருஹஸ்பதி. இப்படி மரம் என்றும், பிருஹஸ்பதி என்றும் சொல்வதற்குக் காரணம் அறிவின்மையும் அறிவுள்ளமையுமே. இந்த தாரதம்யம் எப்படி ஏற்பட்டதென்றால் கலைமகளின் கருணையின் தாரம்யத்தாலேதான். ஆகவே ஸரஸ்வதீ தேவியின் அநுக்ரஹம் எவர்பால் பூர்ணமாய் இருக்கிறதோ அவர் புவியில் பிருஹஸ்பதி என்று போற்றப்படுகிறார். எவர்பால் அவ்வநுக்ரஹம் இல்லையோ அவர் மரம் எனப்படுகிறார்.

இப்படி உலகத்தாரனைவரும் கொண்டாடுவதற்குக் காரணமான வித்யைகளுக்கு அதிஷ்டான தேவதையான ஸரஸ்வதீ தேவியும் லக்ஷ்மீதேவிக்கு அடிமை செய்கிற

வளாய் இருக்கிருள். ஆதலால் ஸரஸ்வதியால் வணங்கப் பட்ட பெரிய பிராட்டியாரை நாம் வணங்குவோம் என்ற படி.

யதீயதாஸீ— ஆளவந்தார் சதுச்சுலோகியில் ப்ரஹ்மே சாதி ஸுரவ்ராஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸ தாஸீகண: என்று பிரமன் ருத்ரன் முதலிய தேவர்கள் தங்கள் தங்கள் மனைவிமார் களுடன் பிராட்டிக்கு அடிமைசெய்கிறவர்கள்; என்று அருளிச்செய்திருப்பது இங்கே அநுஸந்திக்கத்தகும். இங்கு ஸரஸ்வதீதேவி என்று சொல்லியது உபலக்ஷணம். மற்றுமுள்ள தேவர்களின் மனைவிகளும் பிராட்டிக்கு அபேக்ஷிதங்களான பணிவிடைகளைச் செய்கிருர்கள் எனக்கொள்ளவேணும். அங்ஙனம் மற்றைய தேவமாதர்கள் செய்யும் பணிவிடைகளில் ஒன்றை ஒரு பெரியார்

கலைமடந்தை வணங்கி யொருவடந் தொட்டாட்ட
கற்புடைய வள்ளியொருவடந்தொட்டாட்ட
மலைமடந்தை பரிவிலொரு வடந்தொட்டாட்ட
வானவர் கோன் மடந்தை யொருவடந்தொட்டாட்ட,
அலர்மடந்தை நிலமடந்தை யுலகம் வாழ
அருண்மடந்தை பொருண்மடந்தை யழகார் நெற்றிச்
சிலைமடந்தை திருமடந்தை யாடிரூசல்
சீரங்கநாயகியாராடிரூசல்.

என்று ஊசற்றிருநாமப் பாசுரத்திலே அழகாக அருளிச்செய்தார். ஸ்ரீரங்க நாச்சியார் ஊஞ்சலாடும்பொழுது கலைமகள், வள்ளி, மலைமகள், இந்திராணீ என்கிற நால்வர்களும் நான்கு வடங்களையும் பிடித்தூஞ்சலை ஆட்டிக்கொண்டு பிராட்டியை ஸேவித்து நிற்கிருர்கள் என்பது திரண்டபொருள்.

மோக்ஷமளவான செல்வத்தை விரும்புமவர்கள்போல் வித்யைகளை விரும்புமவர்களும் ஸ்ரீ லக்ஷ்மீதேவியையே உபாஸிக்கலாம் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகுமிதில். (9)

यस्याः कटाक्ष मृदु वीक्षण दीक्षणेन सद्यस्समुल्लासितपल्लवमुल्ललास ।
विश्वं विपर्ययसमुत्थ विपर्ययं प्राक्तां देवदेवमहिषीं श्रिय माश्रयामः ॥

யஸ்யா: கடாக்ஷம்ருது வீக்ஷண தீக்ஷணேந
ஸத்யஸ்ஸமுல்லஸிதபல்லவ முல்லலாஸ ।
விச்வம் விபர்யய ஸமுத்த விபர்யயம் ப்ராக்
தாம்தேவதேவ மஹிஷீம் ச்ரிய மாச்ரயாம: ॥

| | |
|---|---|
| ப்ராக் | முன்பு பிரளயகாலத்தில் |
| விபர்யயஸமுத்த விபர்யயம் | கடாக்ஷமில்லாமையால் ஏற்பட்ட தனது நாசத்தையுடையதான |
| விச்வம் | இந்த பிரபஞ்சமானது |
| யஸ்யா: | எந்த லக்ஷ்மியின் |
| கடாக்ஷம்ருது வீக்ஷண தீக்ஷணேந | கண்களுடைய ம்ருதுவான பார்க்க வேணுமென்கிற ஸங்கல்பத்தாலே |
| ஸத்ய: ஸமுல்லஸித பல்லவம் | உடனேயே உண்டான தளிர்களையுடைத்தாயிருக்கும்படி |
| உல்லலாஸ | மலர்ச்சியையடைந்ததோ ; |
| தாம் | அந்த |
| தேவதேவமஹிஷீம் | தேவாதிதேவனுடைய மஹிஷியான |
| ச்ரியம் | லக்ஷ்மியை |
| ஆச்ரயாம: | ஆச்ரயிக்கிறோம். |

யஸ்யா: :— முன்பு பிரளயகாலத்தில் எவளுடைய கடாக்ஷமில்லாமையினால் பிரபஞ்சங்களெல்லாம் இப்பொழுது தென்படுவதுபோலிராது நாமரூபவிபாகமின்றி அஸத்ப்ராயமாயிருந்தனவோ; பிறகு எவள் இவைகளை நாம் குளிரக் கடாக்ஷிக்கவேணுமென்று நினைத்தவளவிலேயே பிரபஞ்சங்களெல்லாம் அக்கணமே தளிர்த்துத் தழைத்

தோங்கி நாமரூபவிபாகத்துடன் விளங்கினவோ; அந்த தேவாதி தேவனுடைய மஹிஷியான மலர்மகளை வணங்கி வழிபடுகிறோம்.

இப்பத்யத்தில் பெரியபிராட்டியாரே ஸகல புருஷார்த்தங்களுக்கும் காரணமென்றும் அவளுடைய அநுக்ரஹ லேசமே அளவற்றவநிஷ்டங்களைப் போக்கி இஷ்டப்ராப்தியைச் செய்விக்குமென்றும் சொல்லப்படுகிறது. இங்கே ப்ராக் என்பதற்கு ப்ரளயகாலத்திலேயென்று சிலர் பொருள் கூறுவார். துர்வாஸமுனிவரது சாபகாலத்தில் என்றும் பொருள் வரைவதுண்டு. இரண்டும் பொருந்தியவையே. பிரளயகாலத்தில் உலகங்களெல்லாம் பெயர் வடிவம் இவைகளொன்றுமின்றி அஸத்ப்ராயங்களாயிருந்தன. ஜீவன்களும் அசேதனம்போல் அறிவழிந்துகிடந்தன. அதற்குக் காரணம் பிராட்டியுடைய கடாக்ஷமில்லாமையே. அவளுடைய கடாக்ஷமில்லாமைக்குக் காரணம் அவள் உபேக்ஷையாயிருந்ததே யல்லது கோபத்துடனிருந்ததாலல்ல. பிராட்டிக்குக் கோபமும் கிடையாது, கோபமும் வந்ததில்லை, வரப் போவதுமில்லை. க: குப்யேத் வாநரோத்தம என்று திருவடியைப் பார்த்துக் கோபத்தை யறியாதவளாயிருந்தே பேசினாள். ஆதலால் அவள் இவ்வுலகங்களின்பால் உதாஸீனையாயிருந்ததுபற்றி உலகங்கள் நாசமடைந்திருந்தன. பிறகு இவைகள் வீணாய்க் கிடக்கின்றனவே! என்று இரக்கங் கொண்டு குளிரக் கடாக்ஷிக்க வேணுமென்று ஸங்கல்பித்தாள். உடனே அந்தக்ஷணத்திலேயே முன்னைவிடப் பதின்மடங்கு அதிகமாகத் தழைத்து ஓங்கிவளர்ந்தன. என்ன விந்தை! நினைத்தவளவிலேயே பிரபஞ்சங்கள் பதின்மடங்கு விருத்தியடைந்து விளங்குகின்றனவே! ஆதலால் அவளது பார்வையில்லாதபோது பிரபஞ்சம் நாசத்தை யடைந்த

தாலும் அவள் பார்க்கவேணுமென்று ஸங்கல்பித்தபோதே பிரபஞ்சம் உண்டானபடியாலும் அப்பிராட்டியே ஸகல லோகத்திற்கும் காரணமானவள் என்று சொல்லப்பட்டது.

துர்வாஸமுனிவரது சாபத்தால் தேவேந்திரன் ஐச்வர்யத்தை யிழந்து வருந்துங்கால் தேவர்களும் மற்றுமுள்ள வுலகத்தாரும் ஒளி மழுங்கி வருந்தினார்கள். உலகங்கள் அஸத்பிராயங்களாயிருந்தன. அதற்குக் காரணம் பிராட்டியின் கடாக்ஷமில்லாமையே. பிறகு பாற்கடலை கடையுங்கால் பிராட்டி அவதரித்துக் கடாக்ஷித்தபடியினால்தான் உலகங்கள் முன்போல் ஸம்ருத்தியுடனிருந்தனவென்றும்சொல்வது பொருத்தமுளதே. தேவேந்திரனும் த்வயா தேவி பரித்யக்தம்ஸகலம் புவநத்ரயம் | விநஷ்ட ப்ராய மபவத் த்வயே தாநீம் ஸமேதிதம் உன்னாலே விடப்பட்ட மூவுலகங்களும் நாசத்தை யடைந்த ப்ராயங்களாயிருந்தன. உன்னால் இப்பொழுது விருத்திசெய்யப்பட்டது என்று பிராட்டியிடம் விண்ணப்பம் செய்து நின்றான்.

எனவே ஆளவந்தார் அருளிய சதுச்சுலோகியின் ஈஷத் த்வத் கருணாநீரீக்ஷண ஸுதா ஸந்துக்ஷணாத் ரக்ஷ்யதே நஷ்டம் ப்ரார்க் ததலாபதஸ்த்ருபுவநம் ஸம்ப்ரத்யனந்தோதயம் என்கிற சுலோகார்த்தத்தையே இங்கு கூரத்தாழ்வான் விவரித்தார்போலும்.

ஆகவே பெரிய பிராட்டியார் கடாக்ஷமே பிரபஞ்சங்களின் ஸத்தைக்குக் காரணமென்பதும் அவள் எப்பொழுதும் அநுக்ரஹம் செய்வதையே ஸ்வபாவமாகக் கொண்டவள் என்பதும் இச் சுலோகத்திற்குத் திரண்டபொருள். ஸாமர்க்யஜுர்மயீம் தேவீம் வேதகர்பாம் மநஸ்விநீம் லோகே சேச விபூதிநாம் காரணம் யந்நிரீக்ஷணம், என்கிற

மங்கண ஸம்ஹிதாவசனத்தை இங்கே பிரமாணமாக அநுஸந்தித்துக்கொள்க. மேலும் ம்ருது வீக்ஷணதீக்ஷணே ந என்றதால் அநுக்ரஹத்துடன் கடாக்ஷிக்கவேணுமென்று ஸங்கல்பித்தாள் என்று கொண்டு பத்மேஸ்திதா பத்மவர்ணு பத்மநாபப்ரியா சுபா | ஸதாநுக்ரஹ ஸம்பந்நா ஸாமே தேவீ ப்ரஸீதது | என்று மங்கண ஸம்ஹிதையிலும் அநுக்ரஹபராம் நுத்திம் அநகாம் ஹரிவல்லபாம் என்று அஷ்டோத்தரநாம ஸ்தோத்ரத்திலும் பேசப்பட்ட அநுக்ரஹசீலதை என்கிற குணத்தையும் இங்கு அநுபவிக்கப்ராப்தம். (10)

यस्याः कटाक्ष वीक्षा क्षण लक्षं लक्षिता महेशा स्युः ।
श्रीरङ्गराजमहिषी सा मामपि वीक्षतां लक्ष्मीः ॥

யஸ்யா: கடாக்ஷவீக்ஷா க்ஷண லக்ஷம்
லக்ஷிதா மஹேசா ஸ்யு: |
ஸ்ரீரங்கராஜ மஹிஷீ
ஸாமாமபி வீக்ஷதாம் லக்ஷ்மீ: ||

| | |
|---|---|
| யஸ்யா: | எவளுடைய |
| கடாக்ஷவீக்ஷா | கடைக்கண்பார்வைக்கு |
| க்ஷணலக்ஷம் | க்ஷணகாலம் பாத்ரமாயிருக்கும்படி |
| லக்ஷிதா: | பார்க்கப்பட்டவர்கள் |
| மஹேசா: | மிகுந்த ஐச்வர்யசாலிகளாக |
| ஸ்யு: | ஆகக்கடவர்களோ |
| ஸா | அந்த |
| ச்ரீரங்கராஜ மஹிஷீ | ஸ்ரீரங்கராதனுடைய திவ்ய மஹிஷியான |
| லக்ஷ்மீ. | பெரிய பிராட்டியார் |
| மாம் அபி | என்னையும் |
| வீக்ஷதாம் | கடாக்ஷித்தருளக்கடவள். |

யஸ்யா:—உலகில் எவர்கள் பெரிய பிராட்டியாருடைய கடைக்கண் பார்வைக்கு ஒருக்ஷணகாலம் பாத்திரர்களா யிருப்பார்களோ; அவர்கள் மிகுந்த ஐச்வர்யசாலிகளாய் ஆகிறார்கள். ஆதலால் அவ்வளவு பெருமைவாய்ந்த ஸ்ரீரங்க நாதனுடைய திவ்ய மஹிஷியான பெரிய பிராட்டியார் அடியேனையும் கடாக்ஷிக்கக்கடவள். அதனால் அடியேனும் க்ருதார்த்தனாகிறேனென்றபடி.

கடாக்ஷ வீக்ஷா க்ஷணலக்ஷம் லக்ஷிதா: உலகத்தில் பலர் ஐச்வர்யவான்களாய் விளங்குகிறார்கள். முதலில் மனிதர் களுள் அரசர்களாயிருப்பவர்களை மிகுந்த தனவான்களெ ன்று கொண்டாடுகிறோம். அதற்குமேல் தேவர்களுள் லோகபாலர்களெண்மர்களை மஹேசர்களெனச் சொல்லுகி றோம். மேலும் இந்திரனை திருலோகாதிபதி என்று வரை கிறோம். அதற்குமேல் பிரமனை தேவர்களனைவருக்கும் நிர் வாஹகனென்றும் ஈரேழுலகங்களுக்கும் நாதனென்றும் மொழிகிறோம். இப்படி மிகுந்த பெருமைவாய்ந்தவர்க ளெல்லாரும் பெரிய பிராட்டியாரின் கடாக்ஷத்திற்குப் பாத் திரர்களாகியே அவ்வவ்வோ பதவிகளைப் பெற்று மேன்மை யுடன் விளங்குகிறார்களென்றபடி.

பத்மயோநி ரிதம் ப்ராப்ய படந் ஸ்தோத்ரம் தத: க்ரமாத் | திவ்யந் சாஷ்டகுணைச்வர்யம் தத் ப்ரஸாதாச்ச லப்தவாந் | என் று பிரமதேவன் லக்ஷ்மீஸ்தோத்ரத்தை பக்தியுடன் அநு ஸந்தித்துக்கொண்டு அந்த லக்ஷ்மீதேவியின் ப்ரஸாதத்தால் (அவளுடைய கடாக்ஷத்தைப் பெற்று) எண்மடங்கு அதிக மாக திவ்யைச்வர்யத்தைப் பெற்றான்; என்று பிரஹ்மபுரா ணத்தில் ஓதப்பட்டது.

ப்ரஹ்மாத்யாச்ச ஸுராஸ் ஸர்வே முநயச்ச தபோதநா: | ஏதந்தே த்வத்பதச்சாயா மாச்ரித்ய கமலேச்வரி! என்று காச்யபர் பிராட்டியை நோக்கி தண்டனிட்டு, பிரமன் முதலிய தேவர்களும் மற்றும் தவத்தையே பொருளாக்கொண்ட முனிவர்களும் உனது பாத நிழலை ஆச்ரயித்து மிகுந்த பாக்யசாலிகளாய் விளங்குகிறார்கள் என்று துதிசெய்தார்.

மங்கண ஸம்ஹிதையில் எட்டு திக்பாலர்களும் பிராட்டியின் கடாக்ஷத்தாலேயே பெருமை பெற்று விளங்குகிறார்களென்பது பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. உலகில் நம்மெதிரே வெண்குடைபிடித்து சாமரங்களால் வீசப்பட்டு பலர் பல்லாண்டுபாட மாவேகிச்செல்கின்ற மன்னவர்களும் பூமேவும் செங்கமல நாவியான் திவ்ய மஹிஷியான பிராட்டியாரின் திவ்ய சரணாரவிந்தங்களைத் தொழுதே அப்பதவியேற்றார்களென்பதை ஸ்ரீ தேசிகன் ச்ரேயஸ்காமா: கமல நிலயே என்கிற ச்லோகத்திலே விவரித்தருளினார்.

ஆர்த்தரக்ஷணம் செய்வதில் தீக்ஷைபெற்றதும் அம்ருதத்தை வர்ஷிப்பதும் தாமரை மலருக்கொப்பானதுமான கடாக்ஷங்களைக்கொண்டு உனது திருக்கண்கள் எந்தெந்த திசைகளில் விளையாடுகின்றனவோ; அத்திசைகளிலெல்லாம் ஐச்வர்யங்கள் கூட்டங் கூட்டமாக நான் முன்னே நான் முன்னே என்று ஓடுகின்றன; வென்ற கருத்துள்ள ஆர்த்தத்ராணவ்ரதிபி: என்ற ச்லோகத்தாலே இந்த சுலோகத்தின் முன்னடியை விளக்கிக்காட்டினார். ஆகவே மனிசர் முதல் பிரமனளவாயுள்ள ஐச்வர்யங்களெல்லாம் பெரிய பிராட்டியாருடைய கடாக்ஷாதீனங்களென்பது பிரமாண பிரஸித்தமானவை முன்பாதியில் பேசப்பட்டது.

இது நிற்க மோக்ஷைச்வர்யத்திற்கும் பிராட்டியின் பிரஸாதமே காரணமென்பது ஸம்ஸாரார்ணவ தாரிணீம் விமுக்தி பலதாயிநீம், என்று பரக்கப் பேசப்பட்டிருப்பது பிரஸித்தமே. ஆனதுபற்றி அடியேன் மோக்ஷ ஸம்பத்தை யடையவேண்டி அடியேனையும் அவள் கடாக்ஷிப்பாளாக வென்று வேண்டிக்கொண்டு ஸ்தோத்ரத்தைத் தலைக் கட்டினார்.

சுபமஸ்து.

श्रीवत्सचिह्नमिश्रेभ्यो नमः ॥

Printed at
The Sri Janardana Printing Works, Limited,
Town High School Road, Kumbakonam.

# "அம்ருதவர்ஷிணீ"

ஓர் உயர்தர மாத ஸஞ்சிகை.

கும்பகோணம் ஸ்ரீ பராங்குச பக்த ஸபையாரால்
வெளியிடப்படுவது.

---

ஆழ்வார்கள் அருளிய திவ்யப்ரபந்தங்களின்
ஆழ்ந்த உட்கருத்தையும் விசேஷார்த்தங்களையும்
எளிய நடையில் விளக்கி வருகிறது.

வருஷ சந்தா ரூ. 3—0—0

---

கிடைக்குமிடம்:—

செக்ரடரி,

ஸ்ரீ பராங்குச பக்த ஸபை,

கும்பகோணம்.